வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්




இதழ் - 1 | 26.05.2023 (வெள்ளிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | விலை : ரூ.70.00

## ஜனாதிபதி தேர்தல் களமிறங்கும் ரணில்: வலைகள் பின்னப்படுகின்றன!

## குறிகள் வைக்கப்படுகின்றன!!

### ரணிலுக்காக களம் இறங்கும் தமிழ்த் தேசியக் கனவான்கள்!



இந்த வருட இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கு ரணில் விக்ரமசிங்க தீர்மானித்திருப்பது உறுதியாகி உள்ளது.

கடந்த சில நாட்களாக ரணிலின் நெருங்கிய சகாக்கள் அடுத்த ஜனாதிபதியாக ரணிலை மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்து கொண்டிருப்பவர் ரணில் - அவரை விட்டால் இலங்கையின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கு வேறு எந்த அரசியல் தலைவராலும் முடியவே முடியாது என்ற கோஷம் மெல்ல மெல்ல முன்வைக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. நன்கு திட்டமிடப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அடிப்படையில் நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி, வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டும்

பக்கம் 10

## கனடா - இலங்கை ராஜீய மோதல்

### மிக மோசமான பாதையை நோக்கி செல்கிறதா?



கனடா நாடாளுமன்றத்தில் அதன் எம்.பிக்களால் நிறைவேற்றப்பட்ட தமிழர் இனப்படுகொலை தினம் கடைப்பிடிப்பு (மே 18) முன்மொழிவு தொடர்பான அறிவிப்பை கனடா பிரதமர் ஜெஸ்டீன் ட்ரூடோ வெளியிட்ட விவகாரத்தில் தனது கடுமையான எதிர்ப்பை இலங்கை தெரிவித்துள்ளது. இது தற்போது அந்த இரு நாடுகளுக்கும் இடையில் ராஜீய அளவிலான மோதலாக உருப்பெற்றுள்ளது.

பக்கம் 11

## ஈழத்தமிழ் மாணவன் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவன போட்டியில் சாதனை!



ஒரு ஈழத் தமிழ் மாணவன் சர்வதேச அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளார். போருக்குள் பிறந்து, வளர்ந்து தாய் நிலத்தில் இருந்து அகதியாக தத்தளித்துச் சென்ற இந்த மாணவனின் சாதனை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மத்தியில் பாராட்டுக்களைப் பெற்று வருகிறது.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் கல்வி கற்று வரும் ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் மேனகா தம்பதிகளின் புதல்வனான அர்ச்சிகன் அமெரிக்காவில் உள்ள

பக்கம் 11



பக்கம் 11

## யாழ் தையிட்டி திஸ்ஸ விகாரை இரகசியமாக திறந்து வைப்பு!

## இனப்படுகொலை குறித்த சாட்சியங்களை ஐ.நாவிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு


### தமிழர்களுக்கே - பிரித்தானியத் தமிழர் பேரவை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையானது தமிழர்களுக்குக் கிட்டிய அரிய வாய்ப்பு என்று சுட்டிக்காட்டியுள்ள பிரித்தானியத் தமிழர் பேரவை இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ்மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அனைத்து மீறல்கள் தொடர்பான சாட்சியங்களைத் திரட்டி அப்பொறிமுறையிடம்

பக்கம் 11



தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## தமிழ்த் தேசிய பற்றுறுதியுடன் தேசியத்தின் முதல் பிரசவம்

இது தேசியம் வார பத்திரிகையின் முதல் பிரசவம். தமிழ்த் தேசியம் சார்ந்து பயணிக்கும் பற்றுறுதியுடன் தேசியத்தின் முதல் பிரசவத்தை உங்கள் கைகளில் ஒப்படைக்கிறோம்.

இன்று உங்கள் கைகளில் குழந்தையாய் தவழும் தேசியம் பத்திரிகையின் வளர்ச்சி தமிழ் மக்களாகிய உங்கள் கைகளிலேயே உள்ளது.

அச்சு ஊடகத்தின் எதிர்காலம் குறித்த அச்சங்கள் இன்று இருந்தாலும் கூட, துணிச்சலுடனும் வீறு நடை போட முடியும் என்ற நம்பிக்கையுடனும் இந்த முயற்சியில் களமிறங்கியுள்ளோம். அதே சம நேரத்தில் சமூக, இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகவும் தமிழ்த் தேசியம் சார்ந்து வீச்சோடு நாங்கள் பயணிப்போம்.

2009 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னர் தமிழ் மக்களின், தமிழ்த் தேசியத்தின் இருப்பை சிதறடிக்கும் சதிச் செயல்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாப்படாத அதே நேரம், தமிழர் நில ஆக்கிரமிப்பு, சிங்கள - பௌத்த மயமாக்கல், அடக்குமுறை என்பன தொடர்ந்து வருகின்றன.

இவ்வாறான நெருக்கடிகளை தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் நேரத்தில் அந்த மக்களின் உரிமைக் குரலாய், உணர்வுகளின் குரலாய் தேசியம் பத்திரிகை தொடர்ந்து தனது பணியை காத்திரமாக ஆற்றும் என்ற நம்பிக்கை எங்களிடம் உள்ளது.

எந்தவித அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது தமிழ் மக்களின் பிரச்சினைகளை உண்மையுடனும் நேர்மையுடனும் வெளிப்படுத்தும் பணியில் தேசியம் பத்திரிகை என்றுமே பின் நிற்காது. கடும் ஊடக அடக்குமுறைகளுக்கு பெயர்போன நாடொன்றில் இருந்து கொண்டு, ஊடகவியலாளர்கள் பலரைப் பலியெடுத்த அதிகார வர்க்கங்களின் மத்தியில் நின்று கொண்டு பத்திரிகை ஒன்றை வெளியிடுவது என்பது கத்தி முனையில் நடப்பதற்கு ஒப்பானது என்பதை நாங்கள் அறிவோம். எனினும் அச்சுறுத்தல், அடக்குமுறைகளுக்கு அஞ்சி உரிமைகளை கைவிட்டு ஒடுங்கி இருக்கப்போவதில்லை என்பதை இன்னும் உரக்கச் சொல்வோம்.

உரிமைகள் நிராகரிக்கப்பட்டபோதே தமிழர்கள் ஆயுதம் தாங்கி உரிமைகளைப் பெற்றுக்கொள்ளப் புறப்பட்டனர். அந்த ஆயுதப் போராட்டம் மௌனித்தாலும் உரிமைக் கோஷங்கள், அதற்கான போராட்டங்கள் மாற்று வழிகளில் தொடர்கின்றன. தொடரும்.

அவ்வாறான தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் குரலால் தேசியம் பத்திரிகை தனது பணியைத் தொடரும். “ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம், உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள்”. என 1959 “ஈழநாடு” முதல் பிரதியைப் பார்த்ததும் ஈழத்துச் சித்தர் யோகசுவாமிகள் ஆசீர்வதித்தார். அந்த வாக்கின்படி அச்சுறுத்தல்களைத் தாண்டி உங்கள் ஆதரவோடு தேசியத்தின் பயணம் தொடரும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்...

# நெருப்போடு விளையாட எவரும் நினைத்துப் பார்க்கவும் கூடாது..!



தமிழ் இனத்தின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கும் நம்மவர் எவரையும் உறுத்துகின்ற முதல் விடயம் நாம் பிளவுபட்டு நிற்பதுதான்!

யுத்தம் முடிவடைந்த 2009ம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான கடந்த 14 வருடங்களாக தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளால் ஒரே கொடியின் கீழ் ஒன்று பட்டு நிற்க முடியவில்லை.

2010ம் ஆண்டு பாராளுமன்ற பொது தேர்தலில் ஏற்பட்ட பிளவுகளும் பிரிவுகளும், இடைக்கிடையே இணைவுகள், மீண்டும் உறவுகள் என்ற ரீதியில் சில இடைவெளிகளோடு, இன்று வரையில் ஒற்றுமையீனம் என்ற ஒரு பாரிய அரசியல் பிரச்சனையாக, தமிழ் மக்கள் மத்தியில் தொடர் கதையாய் நின்று கொண்டிருக்கின்றது.

இப்பொழுது தமிழ் மாநிலத்தில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் இயங்கிக் கொண்டு இருக்கும் பத்து அரசியல் கட்சிகள் 5 அணிகளாக பிரிந்து நிற்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் என 5 கட்சிகள் ஓரணி!

கடந்த ஆண்டு வரையில் கூட்டமைப்பில் பெரிய கட்சி எனக் கருதப்பட்ட தமிழரசுக் கட்சி இப்பொழுது தனி!

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழக்கம் போலவே தனி அணி!

ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும் தனி அணி!

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற பெயரில் 4 கட்சிகள் கொண்ட கூட்டணி ஒன்றுக்கு கடந்த தேர்தலில் தலைமை தாங்கி, அதன் தனி ஒரு உறுப்பினராக பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த விக்னேஸ்வரன், இப்பொழுது கஜேந்திரகுமார் அணியில் இருந்து பிரிந்து வந்த மணிவண்ணன் குழவினரையும் இணைத்துக் கொண்டு தன் சொந்த கட்சியின் பெயரில் தமிழ் மக்கள் கூட்டணி!

விக்னேஸ்வரன் தலைமை தாங்கி வந்த 4 கட்சி கூட்டணியில் தானும் ஒரு கட்சியாக பயணித்த அனந்தி சசிதரன், வேறுவழி இல்லாத நிலையில் ஒரு நேசக்கட்சியாக அவரின் கட்சியுடன் ஒரே அணி!

ஆனால் இவர்கள் எல்லோருமே, விக்னேஸ்வரன், ஆனந்த சங்கரி தவிர, போர் முடிவடையும் வரை ஒன்றாக பயணித்தவர்கள் தான். புளொட் மட்டும் விஷேட விதிவிலக்காக இருந்தது. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இணைந்து கொள்ள அது விரும்பிய போதிலும் ஏனோ அதற்கு அங்கு இடம் கிடைக்கவில்லை.

யுத்தம் முடிந்தும் ஓர் 2 ஆண்டு காலம் காத்திருந்த பின்னரே, அது இணைத்துக் கொள்ளப்பட்டது.
தமிழரசுக்கட்சியின் மேலாதிக்க மனோபாவமும், நடத்தையும் தான் கூட்டமைப்பு கடந்த ஆண்டு இறுதியோடு கலைந்து போய், உடனடியாகவே 5 கட்சிகளோடு மீண்டும் கூட்டமைப்பாக மறு பிறப்பு எடுக்க காரணமானது.

தமிழ்க் கட்சிகளின் இன்றைய நிலைமைகளை மேலும் விபரிக்காமல், ஆக்கபூர்வமாக தொடர்ந்து கூறுவதனால், இந்த நிலைமைக்கு எது காரணம்? யார் காரணம்?

இந்த வேளையில் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவராக வருவதற்கு அதன் மூன்று முக்கியஸ்தர்கள் மும்முரமாக முயன்று கொண்டு இருப்பதாக வரும் உண்மையான செய்திகள் ஊர்ஜிதம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சிறீதரன், சுமந்திரன்,சிவஞானம்! இந்த மூன்று Sகளின் மோதலில், ஏற்க னவே கோஷ்டிகள், குழுக்கள் என ஈடாடிப் போயிருக்கும் தமிழரசுக்கட்சி தடுமாறி, தள்ளாடி, தடுக்கி விழப்போகின்றதா! அல்லது இவர்களில் ஒருவர் தலைவராகி ஓர் இறுக்கமான தலை மைத்துவத்தை புதிய தலைவர் S தமிழரசுக் கட்சிக்கு வழங்குவாரா! என் கின்ற கேள்வி தமிழ் அரசியல் வட்டாரங்களையும் தாண்டி கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் அடிபடலாம் என்றாலும் கூட, இதைப்பற்றி எல்லாம் சாதாரண தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளப் போவது கிடையாது,

ஏனெனில், எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்னும் சலிப்புடன் கூடிய முணுமுணுப்பு, எங்கள் மக்கள் அரசியல் பேசும் மரணவீடுகள், திருமண வீடுகள் மற்றும் இன்னோரன்ன நிகழ்வுகள் எல்லாவற்றிலும் தவறாமல் நிகழும் சங்கதி என்பது நன்கறியப்பட்ட விடயம்.

எமது தமிழ் மக்கள் தமது அரசியல் வாதிகளை நன்றாக அறிந்து வைத்திருக்கின்றார்கள். தமிழ் அரசியல் மேடைகளில் பேசப்படும் ஒற்றுமை என்னும் விவகாரம் வெறும் புலுடா என்பது, அரசியலை நன்கறிந்த அனைத்து தமிழ் மக்களுக்கும் அத்துபடி!

இந்த புலுடா அரசியல் காரணமாகத் தான், வடக்கில் டக்ளஸ் தேவானந்தாவும் அங்கஜன் இராமநாதனும், கிழக்கில் பிள்ளையான் எனப்படும் சந்திர காந்தனும் வியாழேந்திரனும், எம் பிக்களாக மட்டுமின்றி அதிகாரத்துடன் கூடிய அந்தஸ்து கொண்ட பெரும் புள்ளிகளாகவும் வலம் வர முடிந்தது- முடிகின்றது.
அவர்களை விட்டுவிடலாம்! அவர்களின் அரசியல் சிங்கள தேசத்தின் செல்லப்பிள்ளைகளாக சீவிப்பதில் தான் செழித்து நிற்கின்றது என்பது நாடறிந்த உண்மை.

அது, ஒரு மாதிரியான மக்கள் சேவை!. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் பிரிந்து மோதிக்கொண்டிருக்கும் வரையில் இத்தகைய மக்கள் சேவைக்கு புதிது புதிதாக ஆட்கள் வந்து கொண்டுதான் இருப்பார்கள்.

இப்பொழுது உள்ள கேள்வி ஒன்றே ஒன்று தான்!

விடுதலைக்காக கண்ணீரும், செந்நீரும் சிந்திய சாதாரண தமிழ் மக்கள், “கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா! கருகத் திருவுளமோ? என்று கையெடுத்து கும்பிட்டு கேட்காமல் விட்டாலும் கூட, தமக்குள்ளே இடைக்கிடையே மௌனமாக வேதனைப்படும் கையறு நிலையில் தான் தமிழ்த் தேசிய எழுச்சி இப்பொழுது இருந்து கொண்டிருக்கின்றது.

வெற்றிகரமாக முடிந்துபோன ஹர்த்தாலுக்குப் பிறகும் இதுதான் நிலைமை!

ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இதற்கு பல காரணங்கள் உண்டு ஆனால் முதல் காரணம்- பிரதான காரணம் ஒற்றுமைப்பட தவறி நிற்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் என்று தான் கூற வேண்டும்.

சகல முனைகளிலும் துன்பங்களையும், தொல்லைகளையும் தினசரி சந்தித்துக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசத்தின் மக்களின் மன உணர்வுகளை இந்த தமிழ் தேசியம் பேசும் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், தளபதிகளும் எப்பொழுதுதான் உணரப் போகின்றார்கள்?

யாரோ ஒருவர் எங்கோ சொன்னது இப்பொழுது நினைவிற்கு வருகின்றது. எமது எதிரிகள் எமது இனத்துக்குள்ளே எம்மோடு தான் இருக்கின்றார்கள்!

தமிழ்த் தேசத்தின் நெருக்கடியான இன்றைய நிலைமையில் இவர்களை எல்லாம் ஒற்றுமைப்பட வைப்பதற்கு என்னதான் வழி?

இதைத்தான் தமிழ் தேசத்தின் விடுதலையை தீவிரமாக நேசிக்கும் ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் இப்பொழுது உடனடியாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனம் திருந்தி இவர்கள் ஒற்றுமை ப்படவில்லை என்றால், மனம் வருந்தி இவர்கள் ஒற்றுமைப்படும் காலம் கட்டாயமாக வரும். ஏன் எனில் வரலாறு மீண்டும் நிகழ்கின்றது என்பது ஓர் நிர ந்தரமான உண்மை.

பார்த்தசாரதி



# தொழிலாளியும், கம்பனியும் ஒரே பார்வையில்

இலங்கையில் தேயிலை உற்பத்தி என்பது வெளிநாட்டு வருமானத்தை பெற்று தரக்கூடிய பிரதான வளமாக காணப்படுகின்றது. இது தேசிய வருமானத்திலும் முக்கிய பங்களிப்பு வகிக்கின்றது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 வீதமாகவிருந்து 2013ம் ஆண்டு ஆயிரத்து ஐந்நூற்று இருபத்தேழு மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்று கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கறுப்பு தேயிலை உற்பத்தியாக காணப்பட்ட கோப்பி பெருந்தோட்டங்கள் ஏமியா வஸ்டரிக்ஸ் என்ற நுண்மத்தாக்குதலுக்குள்ளாகி அழிவடைந்தது. அதன் பின்னர் கோப்பி பெருந்தோட்ட அதிகாரிகள் வேறு ஒரு பயிருக்கான தேவையை உணர்ந்தமையினால் தேயிலை பயிர் அறிமுகப்படுத்தப்பட்டது. லூல்கந்துரை எனும் இடம் தேயிலை வளர்ப்பிற்கு பொருத்தமான இடமாக கருத்தப்பட்டது. குறித்த பகுதியில் ஜேம்ஸ் ரெய்லர் என்பவர் 1867ம் ஆண்டு 19 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டது. ஏற்கனவே வட இந்திய பகுதியில் தேயிலை உற்பத்தியில் அனுபவம் பெற்றிருந்த ரெய்லர் தேயிலை இலையை சுருட்டி, வாடிய தேயிலைகளை களிமண் அடுப்பில் கரியை பயன்படுத்தி சுட்டு பல சோதனைகளை மேற்கொண்டார். இவ்வாறு தயாரிக்கப்பட்ட தேயிலை இலண்டன் நகர ஏலத்தில் விலையேறப் பெற்றமையின் காரணமாக இலங்கையின் தேயிலை உற்பத்திக்கு ஊக்கமளித்தது.

1873 - 1880 வரை உற்பத்தி செய்யப்பட்ட 12 கிலோ தேயிலை உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 1890ம் ஆண்டு இலங்கை 22 ஆயிரத்து 900 டொன் தேயிலை உற்பத்தியில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தியது. 1971ம் ஆண்டு வரை பெரும்பாலான பெருந்தோட்டங்கள் பிரித்தானியரின் கைவசம் காணப்பட்டது. இவை நில மறுசீரமைப்பு சட்டத்தின்படி அரசாங்க வசப்பட்டது.

1992ம் ஆண்டு தேயிலை பெருந்தோட்டங்களின் நிர்வாகம் 22 தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆரம்பத்தில் பெருந்தோட்டங்கள் தனியார் நிறுவனங்களிடம் வழங்கப்பட்ட போது கூட்டு ஒப்பந்த அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள் நிர்வகிக்கப்படவில்லை. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நியதி சட்டங்கள் மற்றும் பொதுவான தொழிற்சட்டங்களை அடிப்படையாக கொண்டு அவை நிர்வகிக்கப்பட்டன. இதன் காரணமாக சம்பளம் சம்பள நிர்ணய சபையின் ஊடாக தீர்மானிக்கப்பட்டன. 1994ம் ஆண்டின் பின்னர் அரசாங்கம் சம்பள நிர்ணய விடயத்திலிருந்து விலகி கொண்ட பின்னர் பெருந்தோட்ட கம்பனிகள் தொழிற்சங்கங்களை கொண்டு கூட்டு ஒப்பந்தம் மூலம் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்க ஆரம்பித்தன. ஆரம்பத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் மாத்திரம் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதுடன் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் மற்றும் ஒருங்கிணைந்த பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியனவும் தொழிற்சங்க பிரதிநிதிகளாக கைச்சாத்திட்டன. இதுவே 1996ம் ஆண்டு முதல் கூட்டு ஒப்பந்தம் எனும் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது. பெருந்தோட்ட தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தொழிற்சங்கங்களுக்கும் பெருந்தோட்ட கம்பனிகள் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் 1998ம் ஆண்டு முதலாவது கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது தொழிலாளர்களின் நலன் குறித்து அமைந்ததுடன், மலையக மக்களின் வாழ்வியலை தீர்மானிக்கும் அம்சமாக மாறியது. கிட்டத்தட்ட பன்னிரண்டு வரையிலான கூட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

கூட்டு ஒப்பந்தம் 20 வருடங்களை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் கூட்டு ஒப்பந்தம் இருந்த போதும் சரி இல்லாத போதும் சரி முறையாக அதிகரிக்கப்படவில்லை. வாழ்க்கை செலவு உயரும் அளவிற்கு தொழிலாளர்களுக்கு போதுமான சம்பளம் கிடைப்பதில்லை. அவர்களது வாழ்வாதாரத்தை சமாளிக்க முடியாமையின் காரணமாக தோட்ட தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை அதிகரித்து கொள்ளும் நோக்கில் விவசாயம் உள்ளிட்ட பகுதி நேர தொழில்களை செய்து வருகின்றனர். இன்னும் சிலர் தோட்ட புறங்களை விட்டு வெளியேறி நகர்புறங்களில் தொழில்வாய்ப்புக்களை செய்து வருகின்றனர். வளரும் தலைமுறையினர் கல்வி உதவியுடனோ, ஏதாவது ஒரு வகையில் பெருந்தோட்ட தொழிலில் இருந்து விடுதலையாகி நிரந்தர வருமானத்தை பெற்று கொள்ளும் வாழ்க்கை முறையை தேடி செல்கின்றனர். குறித்த ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் அல்லது முழுமையாக இரத்து செய்யப்பட்டு இலங்கையில் ஏனைய தொழிலாளர்கள் அனுபவிக்கும் சம்பள உரிமைகளுடனான மாத சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பதே கடந்த காலங்களில் இந்த தொழிலாளர்களின் கோரிக்கையாக காணப்பட்டது. கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்த பின்னர் இன்னும் பல இன்னல்களை சந்திக்க நேரிட்டுள்ளது.

ஆனால் இவர்களின் உள உணர்வுகளை புரிந்து கொள்ளாத சில இலாப நோக்கமுடைய சின்னத்தனமான அரசியல்வாதிகள் அவர்களை போராட்டங்களை நடத்துமாறு கோரி அவர்களின் வாழ்வாதாராத்தை மேலும் கீழ் மட்டத்திற்கு கொண்டு செல்கின்றனர். இதை புரிந்து கொள்ள முடியாத நம் இனம் அவர்களின் ஆட்டுவித்தல்களுக்கு ஆடுகின்றன. 200 வருடங்களாக கூலி தொழிலாளிகளாக வாழ்ந்து வரும் நம் மலையக சமுதாயம் மாற வேண்டும். அரசியல்வாதிகள் இவர்களின் வறுமையை வைத்து தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். யாரும் இவர்களின் தேவைகளை அறிந்து செயல்படுவதில்லை என்பதை இவர்கள் தாதமாகவே புரிந்து கொள்கின்றனர்.

உலக சந்தையில் தற்போது இலங்கையின் தேயிலை விற்பனை ஒரு ஸ்தீரமான நிலையில் இல்லை. இதனால் தொழிலாளர்களுக்கு நாளொன்றிற்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுத் தரமுடியாத சூழ்நிலை காணப்படுவதாக குறித்த கம்பனிகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே அவர்களின் நிலை கருதியும் நாம் செயற்பட வேண்டும். உதாரணமாக ஒரு குடும்பத்தின் வருமானம் 5 ஆயிரம் ரூபாவாக காணப்படும் எனில் அந்த வருமானத்திற்குள்ளாகவே அந்த மாதம் முழுவதும் வாழுவமே தவிர நமது அத்தியவசிய தேவைகளைவிடுத்து ஆடம்பர தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளமாட்டோம் தானே. அது போல இலங்கையின் தேயிலை உலக சந்தையில் மீண்டும் ஒரு நல்ல விலைக்கு விற்பனையாகும் வரையில் நாம் அந்த தேயிலை உற்பத்தியின் வளர்ச்சிக்கு எவ்வாறு உந்து கோலாக செயற்பட வேண்டும் என எண்ண வேண்டுமே ஒழிய கம்பனிகளுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை. நாம் நமக்கான தேவைகளை கம்பனியிடம் நேராக எப்பொழுது கேட்க முனைகின்றோமோ அன்றுதான் நம் சமூகம் முன்னேறும். அதுவரை அரசியல்வாதிகள் இந்தியாவில் மாத்திரம் அல்ல உலக நாடுகளிலும் வீடு காணிகளை கொள்வனவு செய்து சுகபோகமாக வாழ்ந்து வருவார்கள். நாம் கம்பனியின் போக்கில் செல்வோமாயின் நமது நிலை அறிந்து கம்பனி நிர்வாகம் நமக்காக நாம் கோராமலே சம்பளத்தை உயர்த்தி கொடுக்கும். நாம் வெட்கப்படும் இடத்தில் உயர்த்தப்படுவோம் என வேதங்கள் கூட சுட்டிக்காட்டுகின்றன. எனவே நாம் கொஞ்சம் பணிந்து செல்வதினால் நமக்கு எந்த நஷ்டமும் ஏற்பட போவதில்லை.

மேலும் இன்றைய கால கட்டத்தில் காணப்படும் பொருளாதார விலையேற்றம் காரணமாக மலையகத்தில் வட்டிக்கு பணம் கொடுத்தல், நுண் நிதி நிறுவனங்கள் ஆகியன அதிகளவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இதன் காரணமாகவும் மக்கள் வெளியிடங்களுக்கு தொழில் தேடி செல்கின்றனர். மக்கள் தாம் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை வட்டியாக செலுத்துகின்றோம் என்பதை உணரும் வரையில் அவர்களுக்கு மாதம் இலட்சத்திற்கு மேல் உழைத்தாலும் அந்த பணம் போதுமாக இருக்காது என்பதே உண்மையாகும். தமது வருமான த்திற்கேற்ப செலவு செய்தால் மக்களின் மாத தேவைகள் குறிப்பிட்ட சம்பளத்திலேயே மட்டுப்படுத்தப்பட்டு விடுவதுடன் மீதம் வைக்க கூடிய நிலையும் ஏற்படும். மேலும் நகர்புறங்களில் வாழும் மக்கள் நீர், தங்குமிடம் உட்பட அனைத்திற்கும் பணம் செலவிட வேண்டும். ஆனாலும் தோட்ட புற மக்களுக்கு நீர், தங்குமிடம் இலவசம், அவர்களின் வீட்டு சுற்று புறங்களில் தமக்கு விவசாயம் அல்லது கால்நடை வளர்ப்பு போன்ற சிறு சிறு தொழில்களில் ஈடுபடவும் முடியும். உதாரணத்திற்கு சில மலையக தொழிலாளர்கள் வீட்டில் குறைந்தது ஏதாவது ஒரு வாகனமாவது காணப்படுகின்றது. இவர்களும் இந்த தோட்டத்தில் வேலை செய்து மீதம் வைத்து தான் இவ்வாறான நாகரீக உலகத்திற்கு வந்துள்ளனர். எனவே அனைவரும் உள்ளதை கொண்டு வாழ பழகி கொண்டால் அவர்களுக்கு மேலதிக தேவைகள் ஏற்படாது.

அது மாத்திரமல்ல தோட்ட தொழிலாளிகள் தமக்கு சம்பளம் போதாது என வெளியிடங்களுக்கு சென்று விட்டால் அந்த தோட்டங்களை கமபனி எவ்வாறு நடத்தும். குறித்த பணிகளை மேற்கொள்வதற்கு தொழிலாளர்கள் இல்லாமல் தோட்டங்களை எப்படி பராமரிக்க முடியும். எனவே இரு நபர்களின் பணிகளை ஒருவர் மேற்கொள்ளும் தேவை இங்கு எழுகின்றது. இதனால் தொழிலாளர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். முழுக்க முழுக்க தவறை நம் மீது வைத்து கொண்டு கம்பனி நிர்வாகத்தை குற்றம் சுமத்துவதில் எவ்வித பயனும் இல்லை. நமது பணியை நாம் சரியாக செய்து விட்டு தோட்ட நிர்வாகம் நமக்கு சம்பளம் அதிகரிக்கவில்லை என போராட்டங்களை மேற்கொண்டால் தவறில்லை. நமது பணி ஆங்கு அவ்வாறே கிடக்க நாம் வீணாக சம்பள உயர்வை மாத்திரம் பேசுவதில் பயனில்லை. ஒரு அரசியல்வாதி ஒரு விடயத்தை உள்ளடக்கி போராட்டம் நடத்தினால் அவரது எதிர் அரசியல்வாதி வேறொரு விடயத்திற்காக போராட்டம் நடத்தத் தான் செய்வார் இது அரசியல் சூட்சுமம். இதை நாம் நன்கு கருத்திற்கொள்ள வேண்டும். அரசியலாவதிகள் நம் வாழ்வை நிர்ணயிக்க விட்டு விட கூடாது. நம் வாழ்க்கை நம் கையில் எனவே தோட்ட தொழிலாளர்கள் நாம் வாழும் தோட்ட புறங்களை முதலாவதாக நேசித்து அந்த நிர்வாகங்கள் மகிழும்படி நம் உற்பத்திகளை மேம்படுத்தி காட்ட வேண்டும். பின்னர் அவர்கள் தாமாகவே முன்வந்து நமக்கான சம்பள உயர்வை பெற்று தருவார்கள். உதாரணமாக குறிப்பிட்டால் தலவாக்கலை தோட்டத்தில் நாளொன்றிற்கு அந்த நிர்வாகம் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குகின்றது. அங்குள்ள தொழிலாளர்களும் நிர்வாகத்துடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றர். நிர்வாகம் தொழிலாளர்கள் மத்தியில் நல்ல சுமூகமான நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலை ஏனைய தோட்ட பகுதிகளுக்கும் வரவேண்டும். அப்போது இந்த கூட்டு ஒப்பந்தமோ அரசியல் தலையீடுகளோ தேவையில்லை. தொழிலாளர்கள் பக்கம் வெற்றி கிட்டும்.

மேலும் தோட்ட நிர்வாகம் தனக்கு கிடைக்கும் இலாபத்தை அடிப்படையாக கொண்டு தமது தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்கி அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் பட்சத்தில் தோட்ட புறங்களும் செழிப்பாகும் தொழிலாளர்களின் வாழ்க்கையும் செழிப்பாகும். சம்பள போராட்டம் ஆரம்பிக்கும் போதெல்லாம் குறித்த தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இலஞ்சம் வழங்குவதைவிட தொழிலாளர்களை அழைத்து அவர்களது பிரச்சினைகளுக்கு செவிகொடுக்கும் பட்சத்தில் பிரச்சினைகள் ஏற்படாது. எந்தவொரு விடயத்திலும் தரகர் மூலம் தீர்வு காண முற்பட்டால் இதுமாதிரியான பிரச்சினைகள்தான் எழும். அரசியல்வாதிகளுக்கு செலவு செய்யும் பணத்தை வெயிலிலும், மழையிலும் கஷ்டப்பட்டு உழைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்குவதினால் நிர்வாகத்திற்கு குறைவேதும் ஏற்படப் போவதில்லை. இந்த சம்பள பிரச்சினை என்பது தோட்ட தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர் இணைந்து கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும். வீணாக கூட்டு ஒப்பந்தமும் தேவையில்லை, அரசியல்வாதிகளின் நடுநிலைமையும் தேவையில்லை. வீணாக முரண்பட்டு கொள்வதிலும் போராட்டங்களை நடத்துவதிலும் ஏற்பட்ட பலன் என்ன? நிலுவை சம்பளம் ஏற்பட்டது தான் மிகுதி. எனவே தற்காலத்தில் வசிக்கும் நாம் எதையும் ஆராயாமல் வீணே யாரோ ஒருவரின் கருத்துக்களை கொண்டு நமது தீர்மானங்களை முன்னெடுப்பதைவிட, நன்றாக சிந்தித்து செயற்படுவது சிறந்தது என்பதே நான் இந்த கட்டுரையை எழுதுவதன் நோக்கமாகும். மழையிலும் வெயிலிலும் கஷ்டப்படுவது நாம். ஆனால் நமது நெருப்பில் குளிர் காய்வது எங்கோ இருந்து வந்த மரபு வழி அரசியல்வாதிகளும், நவீன அரசியல்வாதிகளும் தான் எனவே அரசியல்வாதிகளை புறக்கணித்து நாம் அகிம்சை ரீதியான அறவழி போராட்டங்களை நடத்துவோம். வெற்றி நிச்சயம். வாழ்க மலையகம்.

**புனிதப்ரியா**
**பன்னீர்செல்வம்**

# தமிழ் மக்கள் மத்தியில்
## இரட்டை வேடம் போடும் டக்ளஸ்



யாழ் நயினாதீவில் வீதி ஒன்றின் பெயர் சிங்களத்தில் மாற்றப்பட்ட சம்பவத்தின் போது மௌனம் காத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பு வீதி ஒன்றின் பெயர் மாற்றம் செய்யும் போது எதிர்ப்பு தெரிவித்து கேலிக்கூத்தாடுகின்றார் என தமிழ் அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

கொழும்பில் உள்ள கொம்பனித் தெருவின் பெயர் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் 'கொம்பஞ்ஞ வீதி' (Slave Island) என்று மாற்றப்பட்டாலும் அது தமிழில் கொம்பனித் தெரு என்றே இருக்க வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரின் இந்த கருத்திற்கு கண்டனம் தெரிவித்து தமிழ் அமைப்புக்கள் அறிக்கை வெளியிட்டுள்ளன.

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அவர்கள் நீண்டகாலம் பாவனையில் வைத்திருந்த பெயரை அதிகாரிகள் நினைத்தபடி மாற்றுவது தொடர்பிலும் கொம்பனித் தெரு என்ற பெயரை மாற்றக் கூடாதென்றும் அமைச்சரவை கூட்டத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் யாழ் நயினாதீவில் வீதி ஒன்றின் பெயர் சிங்களத்தில் "அதிமேதகு சங்கைக்குரிய பிரஹ் மனவத்தே தம்மகித்தி திஸ்ஸ பெரஹெர மாவத்தை" என இரவோடு இரவாக மாற்றப்பட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தற்போதைய அரசாங்கத்தின் சிங்கள மயமாக்கல் செயற்பாடு என பிரதேச மக்கள் உட்பட பலரும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

ஆனால் பேரினவாதிகளின் இந்த செயற்பாட்டின் போது வாய்திறக்காத அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் உள்ள தமிழ் மக்களுக்காக பரிந்து பேசுவது நகைப்பாக உள்ளது என தமிழ் அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

டக்ளஸ் தனது அரசியல் பயணத்தில் வட மாகாண தமிழ் மக்களின் வாக்குகளை கொண்டே அரசியல் செய்து வருகின்ற போதிலும் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசு செய்யும் அராஜக செயல்களுக்கு எதிராக ஒரு போதும் வாய் திறந்தது இல்லை.

அவ்வாறிருக்கும் போது தற்போது கொழும்பில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியின் வீதி பெயர் மாற்றம் செய்யும் போது மட்டும் அதற்கு எதிராக வலியுறுத்துகின்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்த செயலே அவர் தமிழ் மக்களை எங்கும் ஏமாற்றி அரசியலில் கபட நாடகம் நடத்துகின்றனர் என்பதை தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

அவ்வாறு தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்ட நபர் வட, கிழக்கில் தமிழர்களுக்கு எதிராக பேரினவாத அரசாங்கம் முன்னெடுக்கும் சதி திட்டங்களை நிறுத்துமாறு கோரி வலியுறுத்துமாறு தமிழ் அமைப்புக்கள் சவால் விட்டுள்ளன.

மேலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இனியாவது தமிழ் மக்களை விற்று அரசியல் பிழைப்பு நடத்தாமல் தமிழ் மக்களின் நலன் கருதி செயற்பட முன் வர வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

# தமிழர் தரப்பிடம் ராஜதந்திர நகர்வு
## இல்லாமையே பெரும் பலவீனம் - சபா. குகதாஸ்



ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்து செல்லும் வேளையில் தமிழ்த் தேசியத் தரப்புக்களிடம் வெறும் தேர்தல் அரசியலும் வெற்றுக் கோச போராட்டங்களும் ஆங்காங்கே கத்திக் கலைவதுமாக நடக்கிறதே தவிர போராட்டங்களுடன் ஒரு ராஜதந்திர நகர்வு எதுவும் இல்லை.

தமிழர் தரப்பாக ஒன்று பட்டு போராட வேண்டிய நேரத்தில் தாயகத்தில் ஒரு தரப்பு ஒன்றுபடும் தரப்புக்களை விமர்சிக்கும் நிலை ஆட்சியாளர்களுக்கும் பூகோள நலன் சார்ந்த நாடுகளுக்கும் அல்பா கிடைத்த மாதிரிப் போனதே தவிர தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியான பின்னடைவு தான் எஞ்சியுள்ளது.

தமிழர்களுக்கான நீதிக்கான கதவுகள் திறக்கப்படுவதற்கு உள் நாட்டு ஆட்சியாளர்களை இனியும் நம்புவது தமிழர் தரப்பின் பலவீனம் ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க சர்வதேச ரீதியாக அழுத்தங்களை இலங்கை அரசு மீது ஏற்படுத்தும் ராஜதந்திர நகர்வை தாயக புலம் பெயர் தரப்புக்கள் தொடர்ச்சியாக உருவாக்கவில்லை.

அறிக்கை அளவில் இனப்படுகொலை, சர்வசன வாக்கெடுப்பு, சமஷ்டி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்ற விடையங்களை பேசினாலும் இதனை அடைவதற்கான பொறிமுறை இராஜதந்திர நகர்வுகளை கையாள தவறியவர்களாக தமிழர் தரப்பு உள்ளனர்.

இலங்கையில் நடந்தது தமிழினப் இனப்படுகொலை தான் என்பதை ஒரு நாடு அங்கீகரிப்பதற்கு உரிய செயல் நடவடிக்கைகளை தீவிரமாக மேற் கொள்ளாமையே இலங்கை அரசாங்கம் உள்ளக பொறிமுறை என காலத்தை கடத்துவதுடன் நீதியை நீர்த்துப் போகவும் செய்கிறது.

தற்போதைய சூழலில் அரசியல் அதிகாரத்தின் மூலம் தான் தமிழர் தாயக இருப்புக்களை தக்க வைக்க முடியும் என்ற உண்மையை விளங்கியும் வெற்றுக் கோசம் இடுவதையே சில தரப்புக்கள் முதன்மைப் படுத்துகின்றனர்.

கடந்த காலத்தில் இனப் பிரச்சினை தொடர்பாக முன்னெடுத்த அத்தனை போராட்டங்களிலும் எந்தத் தவறுகள் காரணமாக பின்னடைவைச் சந்தித்தோம் அல்லது அதிகார சக்திகளை எப்படி கையாள தவறினோம் என்பதை மீள் பரிசீலனை செய்தால் அதுவே பிரச்சினைக்கு சரியான பாதையைக் காட்டும் இதனைத் தமிழர் தரப்புராஜ தந்திர ரீதியாக இதுவரை கையாள வில்லை.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சர்வதேச ரீதியாக தமிழர் தரப்பு எடுக்கின்ற உறுதியான ராஜதந்திர நகர்வே தாயக இருப்பை பாதுகாக்கவும் பரிகார நீதிக்கான கதவுகளையும் திறக்கும்.

# தமிழ் இளைஞர்களின் போராட்டங்களுக்கு
## பயந்து சூட்சுமமாக கைது செய்யும் பாதுகாப்பு தரப்பு



வடமாகாணத்தில் கடந்த மாதங்களாக அரசியல் போராட்டங்களில் ஈடுபடும் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த கைது நடவடிக்கைகள் வெளியாட்கள் யாருக்கும் தெரியாமல் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசியல் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், நினைவேந்தல்கள் என தமிழ் தேசியம் சார்ந்த நிகழ்வுகளில் பங்கேற்கும் இளைஞர்களை இரகசியமான முறையில் கைது செய்து ஒருநாள் முழுவதும் தடுப்பில் வைத்திருந்து மறுநாள் மன்னிப்பு வழங்கி அனுப்பி வைப்பது போன்ற ஒரு நாடகத்தை வட மாகாண பொலிஸ் நிலையங்கள் அரங்கேற்றி வருகின்றன.

இதன்படி கடந்த கிழமைகளில் காவல்துறையால் சந்தேகத்தின் பெயரில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ் இளைஞர்களான சிவானந்தராசா நற்சபேஸ், அன்ரன் அகில்ரன் என்பவர்களின் கைதுகள் இடம் பெற்றன.

அரசியலில் ஈடுபாடு உள்ளவர்களும் தேசிய போராட்டங்களில் ஈடுபாடு உள்ளவர்களையும் அரசியல் காரணங்களுக்காக கைது செய்து வருகின்றனர்.

இளைஞர்களையும் அவர்களது குடும்பங்களையும் இவ்வாறு அச்சுறுத்தி வந்தால் அவர்கள் அச்சத்தில் அடுத்தடுத்து அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெறும் போராட்டங்களில் ஈடுபடமாட்டார்கள் என்ற நோக்கத்திலேயே பாதுகாப்பு தரப்பு இது மாதிரியான கைதுகளை மேற்கொள்கின்றது என பல தரப்பினரும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# வடக்கிற்கு படையெடுத்த மலையக மக்கள்!
## கண்ணிருந்தும் குருடர்களாய் அரசியல்வாதிகள்



மலையகம் மற்றும் ஏனைய பகுதிகளில் 1958ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பெருமளவான குடும்பங்கள் இலங்கையின் வடக்கே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குடியேறி கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர்.

எனினும் இவர்கள் இலங்கையில் தொடர்ந்த போரின் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில், இதுவரை வீட்டுத்திட்டங்கள் இல்லாமலும், சொந்தக் காணிகள் இல்லாமலும் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இவ்வாறான குடும்பங்களுக்கு காணிகள், வீடுகள் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இதுவரை எடுக்கப்படாத நிலையே காணப்படுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

சுதந்திரபுரம் பகுதியில் மூத்த அரசியல்வாதியான ஆனந்த சங்கரிக்கு சொந்தமான காணியில் 18க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் குறித்த காணிகளை அந்த குடும்பங்களுக்கே அவர் வழங்கியதையும் நினைவுபடுத்தி நன்றி தெரிவிக்கின்றன பயனடைந்த குடும்பங்கள்.

எனவே மலையகத்திலும் கஷ்டங்களுக்கு உள்ளாகி வடக்கிற்கு இடம்பெயர்ந்து அங்கேயும் பெரும் துயரங்களை அனுபவிக்கும் இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பது உரிய அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் பொறுப்பல்லவா?

தேசியம் பத்திரிகையில்
உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க
தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
021 222 7557 / +94 76 567 3339

# கிழக்கில் தமிழ் மொழியை புறக்கணித்த ஆளுநர் செந்தில் தொண்டமான்



கிழக்கு மாகாணத்தில் கடந்த வாரம் ஆளுநர் பதவியேற்றல் விழாவின் போது சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் ஆளுநராக பதவியேற்றார். வடக்கு-கிழக்கு மாகாணசபை 1989ம் ஆண்டு தொடக்கம் 2023ம் ஆண்டு இன்று வரையும் கிட்டத்தட்ட 33 வருடங்களுக்குப் பின் 12ஆவது ஆளுநராக தமிழர் ஒருவர் ஜனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்பட்டார்.

இந்நிலையில் ஆளுநரின் பதவியேற்கும் நிகழ்வில் தமிழ் மொழியை புறக்கணித்து சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளது.

நலிவடைந்த மக்களின் துன்பதுயரங்கள் மிகவும் வலுவாகத் தெரிந்த ஒருவர் தான் தற்போது ஆளுநராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என பல தரப்பினரும் மகிழ்ச்சி வெளியிட்டு வந்தாலும், ஆளுநரின் இந்த செயற்பாடு கிழக்கு மாகாண தமிழ் மக்களை புறக்கணித்து பேரினவாத அரசியலுக்கு கரம் கொடுக்கும் வகையில் தான் உள்ளது.

தற்போது வட, கிழக்கு பகுதியில் தமிழின அடையாளங்கள் அழிக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களும், விகாரைகள் கட்டப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் கிழக்கு இந்த ஆளநரின் தமிழ் தேசிய கீதம் புறக்கணிப்பானது எதிர்காலத்தில் கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை நிறுவக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது என தமிழ் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக ஆளுநர் இருப்பார் என்ற சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண மக்களுக்கு பிரச்சினையாக ஆளுநர் இருக்க போகின்றார் என மக்கள் ஆளுநரின் இந்த செயற்பாட்டில் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

# 298 ஏக்கர் காணியில் புதிய படைத்தளம்..! தமிழர் பகுதியில் தொடரும் ஆக்கிரமிப்பு!







இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 298 ஏக்கர் காணி மூடப்பட்டு விமானப்படைத் தளம் அமைப்பதற்கு வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஏறக்குறைய 75 வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் Deutsche Welle ஒலிபரப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது, இது உலகின் மிகப்பெரிய பிராந்தியத்தை உள்ளடக்கியது, குறுகிய அலை மற்றும் நடுத்தர அலைகளை ஒளிபரப்புகிறது.

தற்போது, உலகில் இவ்வகையான ஒரே ஒளிபரப்பு நிலையம் ஓமானில் உள்ளது, அது முழுநேரமும் இயங்கவில்லை. அதன்படி, இலங்கையில் அதன் இருப்பிடம் காரணமாக, உலகின் பெரும் பகுதி இந்த ஒளிபரப்பு நிலையத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறது.

குறைந்த செலவில் நீண்ட தூரம் செல்லும் இந்த அலைவரிசைகளை தற்போது உலகின் பல்வேறு நாடுகள் மதம் மற்றும் பிற பிரச்சார நடவடிக்கைகளில் பயன்படுத்துவதாகவும், தற்போதைய வானொலியின் கீழ் சுமார் 75,000 அமெரிக்க டாலர்கள் பெறுவதாகவும் கூறுகிறார்கள். இந்த பகுதி வலுவான அலைகள் இருக்கும் பகுதி என்றும் பெயரிடப்பட்டது. நிலைமை இப்படி இருக்கும் போது கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் கொள்கை முடிவின்படி, 2021 ஆம் ஆண்டில் வருமானம் ஈட்டுவதற்காக பயன்படுத்தப்படாத வளங்களை அதிக உற்பத்தி வழியில் பயன்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. அதன்படி, அமைச்சின் ஒப்புதலுடன், வானொலி கூட்டுத்தாபனம் முறையான நடைமுறைகளைப் பின்பற்றி கனேடிய நிறுவனத்துடன் இணைந்து சூரிய சக்தித் திட்டத்தை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன்படி, குறித்த காணியை இலவச மானியப்பத்திரம் மூலம் வானொலிக் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றி உரிய திட்டத்தில் வருமானம் ஈட்டவும், அரசாங்கம் வழங்கும் பணத்தை நிறுத்தவும் இரண்டாவது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கிடையில், பிரதமரின் கண்காணிப்பு காலத்தில் தற்போதைய ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட கடைசி அமைச்சரவைப் பத்திரத்தின் (MF/PE/CM/2022/125) பின்னர், வானொலி கூட்டுத்தாபனம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி குறித்த கனேடிய நிறுவனத்துடனும் நிறுவனத்துடனும் வானொலி கூட்டுத்தாபனம் ஆரம்ப ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. அது தனது செயற்பாடுகளைத் தொடர்ந்தது.

இதன்படி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மேற்படி விதிவிலக்கு அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், அனைத்துப் பரிந்துரைகளையும் பெற்ற பின்னர், இறுதி எழுத்துப்பூர்வ அனுமதியைப் பெறுவதற்காக காணி அமைச்சு அதற்கான கோப்பை 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திடம் கையளித்தது.

இதனைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதியின் செயலாளர், சுற்றுப்புறங்களைச் சரிபார்க்காமலோ அல்லது கோரப்பட்ட அனுமதியிலோ ஒலிபரப்பு நிலையத்தை மூடிவிட்டு காணியை விமானப்படையிடம் ஒப்படைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வொன்றை மேற்கொள்ள விமானப்படையினரையே நியமித்துள்ளார்.

அதன்படி விமானப்படையின் குழு ஒன்று 5/3/2023 அன்று திருகோணமலை குச்சவெளிக்கு சென்று இந்த அறிக்கையை நடைமுறைப்படுத்த ஆரம்பித்து, இந்த அளவு வளங்கள் மற்றும் வேறு திட்டத்திற்கு சட்டபூர்வமாக வழங்கப்பட்ட நிலம் பற்றிய தகவல்கள் தெரியாமல், மூடுவதற்கு மட்டுமே உள்ளது.

இதன் மூலம் தகவல்களை சேகரித்து இறுதி அறிக்கைகளை நடைமுறைப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வானொலி கூட்டுத்தாபனத்திற்கு 5/17/2023 அமைச்சரவை பத்திரங்கள் மற்றும் உடன்படிக்கைகளை அமைப்பதற்காக வந்த பின்னர் அவர்கள் சங்கடத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைக்கு பிரச்சினைகள் உள்ளதாலும், திருகோணமலையில் போதுமான முகாம்கள் உள்ளதாலும் இப்பகுதிகளுக்கு விமானப்படை முகாம் தேவையில்லை எனவும் திருகோணமலை சிவில் உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் பொது பிரதிநிதிகளுக்கு அறிவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அவள் ஒரு தொடர்கதை..!

**கொழும்பில் பொலிஸ் காவலில் மர்மமான முறையில் மரணத்தை தழுவிய மலையக இளம் பெண்!**


## இலங்கைக்கு மலையக மக்களின் வருகையும் 200ஆவது ஆண்டிலும் மறுக்கப்படும் மனித உரிமைகள்..!

## ராஜகுமாரி மரணத்தில் முழு உண்மைகளும் வெளிவருமா?

## நீதிமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம்! பாராளுமன்றத்தில் போராட்டம்!!

## விமல் வீரவன்ச வெளிப்படுத்திய மனிதாபிமானம்

**விரிவான கட்டுரை அடுத்த வாரம்**






# வடமராட்சி 'ஒப்பரேஷன் லிபரேஷன்': துயர் படிந்த மண்ணின் வரலாற்றை பதிந்த "கல்லறை மேலான காற்று"!

**(வடமராட்சி! சோகங்களின் அதி உச்சங்களை சுமந்த மண்!
வீரத்தின் வித்துக்களையும் பிரசவித்த மண்)**

1987 மே மாதம் 26 ஆம் நாளில் யாழ் குடா நாட்டில் "ஒப்பரேஷன் லிபரேஷன்" நடவடிக்கை இடம் பெற்றது. வடமராட்சியில் ஆரம்பமாகிய இந் நடவடிக்கை இலங்கை இராணுவத்தால் 1987 ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில், அச்சமயம் போராளிகளன் கட்டுப்பாட்டிலிருந்து யாழ் குடாநாட்டில் அமைந்துள்ள வடமராட்சியைக் கைப்பற்றும் நோக்கில் வலிந்த தாக்குதலாகும்.

வடமராட்சி பிரதேசத்தில் 1987 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியில் நடைபெற்ற லிபரேசன் ஒப்பரேசன் வன்செயல் நடவடிக்கையின் போது பல நூறு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை அடைந்த பின்னர் இலங்கை இராணுவம் மேற்கொண்ட முதல் மரபுப் போர் இதுவாகும். இந்நடவடிக்கைக்கு பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கேர்னல் விஜய விமலரத்ன இலங்கை இராணுவத்தை வழிநடத்தியதோடு அப்போதைய இலங்கை சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோர் அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தனர்.

1987 மே 27 இல் விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிக்கும் இராணுவ நடவடிக்கை எனப்பொருள்படும் ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கை இலங்கை இராணுவத்தால் நடத்தப்பட்டது.

5 நாட்கள் நீடித்த இராணுவத்தரப்பில் இந்த நடவடிக்கை கொப்பேகடுவ வழிகாட்டலில் இந்த அப்பாவித் தமிழர்களை வீடுகளில் இருந்து விரட்டி அடிக்கும் இனவாத நடவடிக்கையாக அமைந்தது. இந்த இராணுவ நடவடிக்கை மூலம் பலாலியில் இருந்து வெளிவந்த இராணுவத்தினர் வசாவிளான், குரும்பசிட்டி போன்ற பகுதிகளில் முன்னேறினர். இந்த இராணுவ நடவடிக்கை மூலம் பெருந்தொகை மக்கள் இடம்பெயர்ந்தனர். இதில் பெரும்பாலான தமிழர்களின் வீடுகள் எவ்வித காரணமும் இன்றி புல்டோசர்கள் மூலம் இடிக்கத்தழிக்கப்பட்டது.

மேலும் பல அப்பாவித் தமிழர்களின் பூர்விகப் பிரதேசங்களைப் பலாத்காரமாகப் பறிமுதல் செய்து பலாலி விமானநிலையமும் விஸ்தரிக்கப்பட்டது. இன்றும் இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளத் திரும்புவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கையில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கை மூலம் அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளே இலங்கைத் தமிழர்கள் இந்தியாவின் தலையீடு வேண்டும் எனக் கோரக் காரணம் ஆயிற்று. இந்த இராணுவ நடவடிக்கை அடுத்தே 1987 இல் இந்திய அமைதி காக்கும் படை இலங்கை வந்தது. 1987 இற்கு முற்பட்டகாலப்பகுகியில் சிறிலங்கா இராணுவம் அவர்களின் முகாம்களுக்குள்ளேயே தமிழர் இயக்கங்களினால் முடக்கி வைக்கப்பட்டிருந்தனர். தொண்டமானாறு, வல்வெட்டித்துறை இராணுவ முகாம்களினூடாக முன்னேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர், வடராட்சிப் பிரதேசத்தையே ஆக்கிரமித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கை வடமராட்சியுடன் இடைநிறுத்தப்பட்ட போதும் இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் முழு யாழ்ப்பணத்திற்கும் ஆனதாகக் கருதப்படுகின்றது.

1987 மே இறுதியில் வடமராட்சியில் நடந்தேறிய "ஒப்பரேசன் லிபரேசன்" நினைவுகள் மிகக் கொடூரமானது. கோரமானது, துன்பங்களின் சுவடுகள் இன்னும் அங்கே பதிக்கப் பட்டவையாக உள்ளன. பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை அடைந்த பின்னர் இலங்கை இராணுவம் மேற்கொண்ட முதல் மரபு வழிப் போர் இதுவாகும். இந்நடவடிக்கைக்கு பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கர்னல் விஜய விமலரத்ன ஆகியோர் இலங்கை இராணுவத்தை வழி நடத்தியதோடு அப்போதைய இலங்கை சனாதிபதி ஜெ. ஆர். ஜயவர்தனா, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோர் அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தனர்.

நாளைய சந்ததி இவ்வரலாறுகளை மறக்காமல் இருக்கவும், வரலாற்றின் துயர் படிந்த நாட்களை மீள நினைவு கொள்வதும் தமிழ் மக்களின் கடமையாகும். வடமராட்சியில் நடந்தேறிய "ஒப்பரேசன் லிபரேசன்" துயர் படிந்த நாட்களை வரலாற்றுத் தடங்களில் பதித்ததில் "கல்லறை மேலான காற்று" எனும் கவிதை தொகுப்பு ஒரு சான்றாகும்.

காற்றுக் கூட அனலாக வீசிக்கொண்டிருந்த 1987 காலகட்டம். அவ்வேளையிலும் விடியலை நோக்கிய எழுச்சியில் சண்டமாருதமாய் எழுந்து நின்ற இளங் கவிஞர்களின் படைப்பே "கல்லறை மேலான காற்று" எனும் கவிதை தொகுப்பாகும். ஐந்து நாட்கள் நீடித்த இராணுவத் தரப்பில் இந்த நடவடிக்கை கொப்பேகடுவ வழிகாட்டலில் இந்த அப்பாவித்தமிழர்களை வீடுகளில் இருந்து விரட்டி அடித்த நடவடிக்கையாக அமைந்தது. இந்த நடவடிக்கை மூலம் பெருந்தொகை மக்கள் இடம் பெயர்ந்தனர்.

இருண்டு போன வடமராட்சி மண்ணின் வாழ்மியத்துக்கு ஒளியை ஊட்டுவதற்கு எழுதகோலை உயர்த்திப் பிடித்த கவிஞர்களின் உள்ளக்குமுறலாய் "கல்லறை மேலான காற்று" சாட்சியம் பெறுகிறது.

**1. ஞானசேகர்**
**2. குரபரன்**
**3. அகிலன் திரு**
**4. நாடி**
**5. இரா. ஜனகன்**
**6. சடாவதணன்**
**7. கா.யோ. கிரிதரன்**
**8. தலவாக்கொல்லை சௌந்தரராஜன்**

ஆகிய எட்டு வளருங்கவிஞர்களின், நம் மண்ணின் கொடூரமான நிகழ்வுகளை நினைவு கூறும் கவிதைத் தொகுப்பாக மிளிர்ந்தமை இன்னோர் சிறப்பாகும்.

ஈரோசின் மாணவ அமைப்பான"மாணவர் இளைஞர் பொது மன்றத்தால்" (GUYS) 1988 இல் வெளியிடப்பட்ட இத்தொகுப்பில் அடங்கிய அனைத்தும் எரிதழல் கவிதைகள். படிப்பவர் நெஞ்சில் உணர்ச்சிப் புயலை எழுப்புகின்றன. இவற்றை எழுதியவர்கள் இளம் வளருங்கவிஞர்கள். அவர்கள் ஈழத்தமிழரின் மானுட வாழ்வை தனித்து நின்று பார்க்காமல், போராடும் மக்கள் மத்தியில் நின்று, அவர்களின் துயர துக்கங்களில் பங்கேற்று, மண்ணின் வாசனையை கவிதைகளின் ஒவ்வொரு வரியிலும் காணக் கூடியதாக உள்ளது.

தமிழர்களை பீரங்கிகளுக்கு இரையாக்கி, ஈழ தேசத்தை பிணக்கோலமாக்கி, குண்டு மாரி பொழிந்து கொலைக்கூத்து நடந்தேறிய காலகட்டமது. இனப் பகைமையில் மனித உயிர் மலினமாகிப் போனது. இனவெறியின் வேட்டைக் களமாய் வடமராச்சி மாறி விட்ட கழிவிரக்க நிலையில், ஒரு கவிஞனின் தீனக்குரல் எழுகிறது.

**இனிய வடமராட்சி**
**மீன்கள் துள்ளும்**
**கடலலை ஓரம்**
**பேய்கள் குவியும்**
**பிணங்களை உருட்டும்**
**தேடுதல் வேட் டையின் பேரில்**
**தேவைகளை தீர்த்துக்**
**கொள்ளும்..**
**சோதனை என்னும் பெயரில்**
**பெண்களை சுவைத்துப் பார்க்கும்**
**என மனம் கசியும் கண்ணீர்த்துளிகளே இவ்வரிகள்.**

மேலும் பல அப்பாவித் தமிழர்களின் பூர்விகப் பிரதேசங்களைப் பலாத்காரமாகப் பறித்து இராணுவ ஆதிக்கம் விஸ்தரிக்கப்பட்டது. இன்றும் பறிமுதல் செய்த இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளத்திரும்புவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கையில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த இராணுவ நடவடிக்கை மூலம் அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு அதீதமான அநீதிகளே இழைக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட ஈழ மக்கள் வாழ்வின் அவலத்தைச் சொல்லி

**தாயே.. அம்மா...**
**முடியாது வரலாறு...**
**முள்வேலிக்கப்பால்**
**உன் வரலாறு...**
**நீயே தொடர்ந்து கொள்!..**

என ஈழ மக்கள் வாழ்வின் அவலத்தைச் சொல்லி, போரின் கோர முகங்களை உலகிற்கு பறை சான்றுகிறான் இன்னோர் கவிஞன்.

கல்லறை மேலான காற்று, எக்காலமும் நினைவுகள் அழியாத அனல் வீசும் கவிதைக் கணைகளாகவும், மானுட நேசம் மிகுந்து வரும் தென்றலாகவும் தவழ்கிறது. சண்டமாருதமாகவும் சீறுகிறது.

**கல்லறைக்குள் புதைந்தவர்கள்**
**ஊமைகளல்ல**
**விடிவு காண**
**சாவை துச்சமென்று**
**கருதி போராடிய போராளிகள்**
**என முழங்குகிறது.** தமிழ் மண்ணில் நிகழ்ந்த இவ் வரலாற்றுப் படுகொலை நிகழ்வை சரித்திரமாக வரைந்த கவிதைகளாகவும் நாம் உணரலாம் .

விமானம், தரைவழி, மற்றும் கடல்வழித் தாக்குதல்கள் என மும்முனைகளிலும் படையினர் முன்னேறிச் சென்ற வழிகளில் பலநூற்றுக்கும் மேலும் தமிழ் இளைஞர்களையும் கைது செய்து கப்பலில் ஏற்றி புதிதாக திறக்கப்பட்ட "பூசா" தடுப்பு முகாமுக்கு ஏற்றிச் சென்றனர்.அங்கே கொண்டு செல்லப்பட்ட நூற்றுக் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இதுவரையில் திரும்பவேயில்லை. அதேவேளை போகும் வழியெங்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடுகள் இன்றி சுட்டும் எரித்தும் படுகொலைகள் செய்யப்பட்டனர். இவ்வாறு ஈழத்தமிழர் சாவின் பிடியில் தத்தளித்த நிலையினை...

**ஆண்டவனும் தோற்றான்**
**அரசபயங்கரவாதத்திற்கு**
**மண்ணில் ஒவ்வொருதுகளும்**
**அந்நியர் கால்களில்**
**நசுங்கிப் போனதும்**
**எங்கள் கால்களை இழந்து**
**எங்கள் முகங்களை இழந்து**
**எங்கள் பரம்பரையை இழந்து**
**ஆத்மாவை மாத்திரம்**
**நகத்தின் இடுக்கில் ஒளித்து**
**இன்று வரையிருப்பதை**
**எப்படி மறப்போம்?**

என்கிறான் இன்னோரு கவிஞன். "கல்லறை மேலான காற்று" அள்ளி எரியும் நெருப்புப் துகள்களின் மீதான வருடல்களின் நெருடலாக உணர்ச்சியூட்டுகின்றது.

சர்வாதிகாரம் ஆட்சி செய்யும் மரணத்தின் உலைக்களமாய் ஈழம் உருமாறிய கோரச் சூழலை, ஈழத்தமிழரின் புராதன பெருமை வாய்ந்த கலாச்சார சின்னங்களை அழித்தொழிக்கப்பட்ட குரூரத்தை இன்னொரு கவிதை இப்படி சித்தரிக்கிறது.

**கோயில்களையும் தூளாக்கிய**
**கொடுமை...**
**கொடுமை**
**பயந்தோடி பதுங்கு குழியில்**
**பயங்கரவாதிகளாக்கப்பட்ட**
**மழலைகளை மறக்க**
**மனம் மறுக்கிறது.,**
**மாண்டாண் வெளிகளில்**
**மண்ணே வெடிமருந்தாக**
**மணக்கிறது..,**
**முலைப்பாலை குடிப்பதற்குள்**
**மூச்சை நிறுத்திய**
**முப்படைத் தாக்குதல்...**
**தாயை.. தகப்பனை...**
**தமயனை...,,**
**வீட்டு நாயைக்கூட**
**இழந்தோம்.**
**என உள்ளம் பொங்க குமுறுகிறான்.**

இந்நூலின் முன்னுரையில் அல்வாய் கலாமணி மேலம் குறிப்பிடுகையில், வடமராட்சியில் நடந்தேறிய ஒப்பரேஷன் லிபரேஷன் கொடுமைகளின் கோரங்களையும் சிதைவுகளையும் நினைவு கூர்வாகக் கொண்டு வெளியாகும் இக்கவிதைகள எழுதியவர்கள் இளங்கவிஞர்கள் என்பதும் இத்தனை அழிப்புகளுக்கு மத்தியிலும் அதன்வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கொண்டு புதியவர்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே நிதர்சனமாகும்.

இக்கவிதைகள் யாவுமே, இராணுவக் கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை வெளிக் காட்டி, வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் வகையிலும் வரலாற்று ஆவணமாகவும் இதற்கு ஓர் இடமுண்டு என முன்னுரையில் அல்வாய் கலாமணி குறிப்பிட்டுள்ளார்.

**- நவீனன்-**



# சவாலும் சந்தர்ப்பமும் ஒரே நேரத்தில் எதிர் நிற்கையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்ய வேண்டியது என்ன...?

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடாமல் - ஒன்றுபட முடியாமல் பிரிந்து நிற்கின்றன.

தமிழ்த் தேசியத்தை முன்வைத்து செயற்படும் 10 தமிழ் அரசியல் கட்சிகள் 4 அணிகளாக பிரிந்து நிற்பதை தேசியம் தனது முன்னைய ஆசிரியத் தலையங்கத்தில் சுட்டிக்காட்டி இருந்தது.

**ஒன்றுபடுவார்களா இவர்கள்? என்ற கேள்வியையும் எழுப்பியிருந்தது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் 5 கட்சிகள் ஓரணி சேர்ந்திருக்கையில் தமிழரசுக் கட்சி, மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தனித்தனியாகவும், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியுடன் அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் கைகோர்த்து ஓர் தனி அணியாகவும் இருந்து கொண்டிருப்பதுதான் இன்றைய தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை!

இந்த தமிழ் கட்சிகள் அனைத்துமே இலங்கைத்தீவின் இனப்பிரச்சனைக்கு தீர்வாக சமஷ்டி என அழைக்கப்படுகின்ற இணைப்பாட்சி முறையையே முன் வைத்து நிற்கின்றன.

**சுயநிர்ணய அடிப்படையில், இணைப்பாட்சி முறையின் கீழ், வடகிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழ் மாநிலத்துக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசியல் கட்சிகளின் அடிப்படை நிலைப்பாடு.**

சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி முறை நாட்டை பிரிப்பது அல்ல - பிரிவினை அல்ல என்பதை நன்கு தெரிந்து கொண்டும் சிங்கள இனவாதிகள் அது பிரிவினைவாதம் என கடந்த 70 வருடங்களுக்கு மேலாக விதண்டாவாதம் செய்து வந்திருக்கின்றார்கள்.

சமஷ்டிக் கோரிக்கையை அடிப்படையாக கொண்டு, 1949ல், தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்திருந்த நிலையில் அன்றைய காங்கேசன்துறை தொகுதி எம் பி செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த நாளில் இருந்து இதுதான் நிலவரம்.

1956 பொதுத்தேர்தலில், தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட ஒத்துழைப்பு தமிழ் அரசியல் வாதிகளின் கைகளில் இருந்து வந்த தமிழ் அரசியல் தலைமை தமிழரசுக் கட்சியால் கைப்பற்றப்பட்டது.

அந்த நாளில் இருந்து, சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி கோரிக்கைக்கு எதிரான சிங்கள இனவெறிக் கூச்சலும் தீவிரம் அடைந்தது..

1956 ல் இருந்து 1972 வரையில், சமஷ்டிக் கோரிக்கை கோலோச்சிய தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், அந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட குடியரசு அரசியல் சாசனத்தோடு, தமிழ் தேசிய இனத்தின் அரசியல் குறிக்கோளும் தடம் மாறத் தொடங்கியது.

தமிழீழக் கோரிக்கையை எழுப்ப தொடங்கியிருந்த ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளை கேலியும் கிண்டலும் செய்து வந்த, தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமது பகைமையை கைவிட்டு தமிழர் கூட்டணியாக அதே கோரிக்கையை முன் வைத்தன.

**1977 பொதுத்தேர்தலில் தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயர் மாற்றத்தோடு தமிழீழத்தின் பெயரால் மக்களிடம் ஆணையை கோரியது.** அந்த ஆணை அமோக ஆதரவுடன் வழங்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்லிங்கம் 18 எம் பிக்களோடு எதிர்க் கட்சி தலைவர் ஆக தெரிவு செய்யப்பட்டார்.

பதவிக்கு வந்திருந்த ஜெயவர்த்தன அரசு தமிழர் விடுதலை கூட்டணியோடு நடாத்தி வந்த பேச்சுவார்த்தை, மாவட்ட அபிவிருத்தி சபைகளை பிரசவித்தது.

தனிநாடு கோரி நின்ற தமிழர் விடுதலைக் கூட்டணி, இப்பொழுது மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்களான தேர்தலில் தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டது!

இந்த சந்தர்ப்பவாத அரசியலால் ஏமாற்றமடைந்திருந்த தமிழ் மக்கள் அந்த தேர்தலிலும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத்தான் வாக்களித்தார்கள்!

காரணம், எழுச்சி பெறத் தொடங்கியிருந்த தமிழ் இளைஞர் இயக்கங்களின் வன்முறை நடவடிக்கைகளுக்கு பதிலடியாக, அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தன கட்டவிழ்த்து விட்டிருந்த அப்பட்டமான அரச பயங்கரவாதம்!

இந்த சூழ் நிலையில், 1983 ஆடியில் தமிழ் மக்கள் மீது ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அரசு தொடுத்த, பிரகடனப்படுத்தப்படாத போருக்குப் பதிலளிக்கும் விதத்தில், தமிழர் தரப்பில் ஆயுதம் ஏந்திய விடுதலை இயக்கங்கள் போரில் இறங்கின.

26 வருடங்கள் நீடித்த யுத்தம், 2009 மே மாதம், அதாவது, 14 ஆண்டுகளுக்கு பின்னர் முள்ளிவாய்க்காலில், இந்தியா உட்பட வெளிநாடுகளின் உதவியோடு ஸ்ரீலங்கா அரசினால் வெற்றி கொள்ளப்பட்டது.

இப்பொழுது 14 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இருந்தும், தமிழ் மண்ணில் செயற்பட்டுக்கொண்டிருக்கும். 9 அரசியல் கட்சிகள் ஒரே கொடியின் கீழ் அணி திரள முடியாமல் அல்லாடிக் கொண்டிருப்பது தமிழ்த் தேசத்தின் மிகப்பெரிய சாபக்கேடு.

தமிழர் தேசத்தை சிதைத்துவிட சிங்கள பௌத்த பேரினவாதம் சீறி நிற்கையில், எமது மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்துகின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும், அந்தக் கோரிக்கையின் பின்னால் ஓரணியாக திரள முடியாதிருப்பது, **முள்ளிவாய்க்காலுக்கு அடுத்தபடியாக தமிழர் தேசம் சந்திக்கும் மிகப் பெரிய அரசியல் சோகம்** என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும்.

**ஒரே குரலில் சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்த இந்த கட்சிகள் தயங்குவது ஏன்?**

ஒன்றுபடத்தான் முடியவில்லை! ஆனால், அதை புரிந்து கொள்ள முடியும். அது எமது அரசியல் தலைவர்களின் பரம்பரை வியாதி.

ஆயினும், சமஷ்டிக் கோரிக்கையின் அடிப்படையில் இந்தக் கட்சிகள் எல்லாம் ஒரு பொது உடன்பாட்டிற்கு வருவதற்கு அப்படி என்ன தான் தடை இருக்கின்றது?

தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையை தனது காலத்தில் தொடர்ந்து 22 ஆண்டுகளுக்கு மேலாக, நார்நாராக கிழித்து வந்த தமிழ் காங்கிரஸ் தலைவர், மறைந்த ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் பேரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலமே, இப்பொழுது அந்த கட்சியை, சமஷ்டிக் கோரிக்கையின் தீவிரமான முன்னெடுப்புக்கு கொண்டு வந்திருக்கும் நிலையில், இத்தகைய பொது உடன்பாட்டுக்கு வருவதில் என்னதான் தடை இருக்க முடியும்?

மாகாணசபைகள் திட்டத்தை அறிமுகப்படுத்திய 13வது அரசியல் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை ஓர் இடைக்கால ஏற்பாடாக வலியுறுத்திட கஜேந்திரகுமாரின் தமிழ்க் காங்கிரஸ் மறுத்துவருகின்றது. இவ்விதம் மறுப்பதற்கு அந்த கட்சிக்கு சகல உரிமைகளும் உண்டு.

இருந்தாலும், 13 வது திருத்தம் தொடர்பில் அழுத்தம் கொடுப்பதில் சற்று பின்னடைவை இந்த மறுப்பு ஏற்படுத்துகின்றது என்பதும் உண்மைதான். ஆனால், அதை வைத்து அவரின் கட்சியை ஓரம் கட்டி விடலாம் என ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் நினைக்கக் கூடாது.

இப்பொழுது **சமஷ்டிக் கோரிக்கையை ஒன்றுபட்டு வலியுறுத்த இன்றைய அரசியல் சூழல் ஓர் நல்ல வாய்ப்பினை தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்துக்கும் தந்திருக்கின்றது.**

ஏனெனில், 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த தயார் என்று ஒரு சில சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை படிப்படியாகத்தான் செய்ய முடியும் என்கின்றார்.

இந்திய அரசாங்கமும் அதனை ஆமோதிக்கின்றது. இதே வேளையில் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வினை, பாராளுமன்றத்தையே ஒரு தேசிய அரசாங்கமாக்கி, காண முயற்சிக்க வேண்டும். என்னும் நவீன யோசனை தனது மேதின செய்தியில் முன்வைத்திருக்கும் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க அதற்கு தமிழ் கட்சிகளின் ஒத்துழைப்பையும் கோருகின்றார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான அவரின் நிகழ்ச்சி நிரலோடு இது பொருந்தி நிற்கின்றது.

2024ல் தான் நடாத்த விரும்பும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் வாக்குகளை வளைத்துப் போட ரணில்விக்கிரமசிங்க விரிக்கும் வலை இது.

அதே நேரத்தில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி பௌத்த, சிங்கள பேரினவாதத்தை பகைத்துக் கொள்ளவும் அவர் தயாராக இல்லை.

ஏனெனில், ஜனாதிபதி தேர்தல் நிகழவிருக்கும் சூழ்நிலையில், பௌத்த சிங்கள பேரினவாதத்தோடு அநாவசியமாக முரண்படுவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் அரசியல் கற்றுக்குட்டி அல்ல.

இந்த பின்னணியில், இலங்கையில் திடமாக கால்பதித்திருக்கும் சீனாவின் நடவடிக்கைகள் தொடர்பில், தான் காட்டி வரும் கழுகுப் பார்வையில் பத்தில் ஒரு பங்கைக் கூட, தமிழரின் பிரச்சனை தொடர்பில் திருப்புவதற்கு இந்தியாவுக்கு மனமில்லை.

காரணம், **இலங்கை அரசாங்கத்தை மென்வலுவுடன் கையாளவே அது விரும்புகின்றது.**

இந்திய ராஜதந்திரம், இன்றைய சூழ்நிலையில் தமிழர் தேசத்திற்கு எதனையும் உருப்படியாகவும், உடனடியாகவும் தரப் போவதில்லை.

இருந்தும், வேறு வழி இல்லை என முடிவு கட்டியிருக்கும் தமிழ்க் கட்சிகள், கஜேந்திரகுமாரின் தமிழ்க் காங்கிரஸ் நீங்கலாக, 13 வது திருத்தத்திலேயே தொங்கிக்கொண்டு இருக்கின்றன.

**மாகாண சபைகளுக்கான தேர்தலும் இல்லை! 13வது திருத்தமும் முழுமையாக இல்லை!** தொடர்ந்து வெற்று வாக்குறுதிகளே நீடிக்கப் போகின்றன என்பதுதான் இன்றைய யதார்த்தம்.

**சவாலான இந்த அரசியற் சூழ்நிலையில், இணைப்பாட்சி கோரும் ஓர் பொது நிலைப்பாட்டை ஒரே குரலில் வலியுறுத்த, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பம், உரிய முறையில், விரைவாக பயன்படுத்தப்பட வேண்டும்.**

**காலப்போக்கில் ஒரே கொடியின் கீழ் ஓர் பலமான அரசியல் ஒற்றுமை மலர்வதற்கும் அது வழிவகுக்கும்.**

பார்த்தசாரதி



நிலாந்தன்

# மதில் மேல் இருக்கும் ஆமைகள் ?

மற்றொரு மே 18ம் கடந்து போய்விட்டது. இது பதினாலாவது மே18. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 14 ஆண்டுகளில் தமிழ் அரசியல் எதுவரை முன்னேறியிருக்கிறது? அல்லது எங்கே தேங்கி நிற்கிறது?

மே 18ஐத் தமிழ்த்தரப்பு எவ்வாறு அனுஷ்டிக்கிறது என்பதிலிருந்தே ஒரு மதிப்பீட்டுக்கு வரலாம். அது ஒரு தேசிய துக்க தினம் என்று தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் சில பகுதிகளைத் தவிர ஏனைய தமிழ்ப் பகுதிகளில் வாழ்க்கை வழமைபோல இயங்கியது. பாடசாலைகள் இயங்கின. அலுவலகங்கள் இயங்கின. பாடசாலைகளில் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நடந்தன: வெளிக்களப்பயிற்சி நிலையைப் பரீட்சைகள் நடந்தன.

ஒரு தொகுதி மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி போய்க்கொண்டிருக்க, ஏனையவர்கள் தமது அன்றாடத் தொழில்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். தமிழ்ப் பகுதிகளில் ஆங்காங்கே கஞ்சி காய்ச்சி கொடுக்கப்பட்டது. கஞ்சி காய்ச்சும் நிலையங்களைக் கடந்து போனவர்கள் ஆங்காங்கே கஞ்சியை வாங்கி குடித்தார்கள். பின்னர் வீட்டுக்குச் சென்று வழமையான மதிய உணவை அருந்தினார்கள். அதாவது சித்திரைக் கஞ்சியை குடிப்பதுபோல விரதமிருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு விரத உணவாக அருந்தியவர்கள் எத்தனை பேர்?

மே 18க்கு முதல் நாள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அந்த நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கடைகளை மூடுமாறும் பாடசாலைகளை மூடுமாறும் அழைப்பு விடுத்தது. ஒரு தேசிய துக்க தினத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று அதற்கு முதல் நாள்தான் ஒரு கட்சி மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது என்றால் நிலைமை எப்படியிருக்கிறது?

ஒரு தேசிய துக்க தினத்தன்று, தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் துக்கத்தை அனுஷ்டிக்க, பெரும்பகுதியினர் தமது வழமையான அன்றாடச் சோலிகளுக்குள் மூழ்கிக் கிடந்தார்கள். அப்படியென்றால் அதை ஒரு தேசிய துக்கதினம் என்று அழைக்கலாமா?

கடந்த வியாழக்கிழமை முள்ளிவாய்க்காலில் மொத்தம் 2000க்கும் குறையாதவர்கள் கூடினார்கள் என்று ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். பல்கலைக்கழக மாணவர்களும் அப்படித்தான் கூறுகிறார்கள். பொதுக் கட்டமைப்பினர் கிட்டத்தட்ட 4,000 பேர் வரை கூடினதாக கூறுகிறார்கள். தாங்கள் மொத்தம் 1500 தீப்பந்தங்களை நட்டு வைத்ததாகவும்,ஆனால் அதைவிட அதிகமான தொகையினர் அங்கு கூடியிருந்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி வருவதற்கு பொதுவான ஏற்பாடுகள் எவையும் இருக்கவில்லை. நடைமுறையில் உள்ள பொதுக் கட்டமைப்பானது நினைவு கூர்தலுக்கான பொது இடத்தை நிர்வகிப்பதற்கும் அப்பால் மக்களைத் திரட்டும் வேலைகளை செய்யவில்லை. அக்கட்டமைப்பில் சில கத்தோலிக்க மதகுருக்களும் செயற்பாட்டாளர்களும் உண்டு. ஓர் அங்லிகன் மதகுரு கட்டமைப்பை வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும், பரந்துபட்டதாகவும் மாற்ற வேண்டும் என்று முயற்சித்திருக்கிறார். திருகோணமலையைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரும் அவ்வாறு கேட்டிருக்கிறார். பல்கலைக்கழக மாணவர் அமைப்பினரும் கேட்டிருக்கிறார்கள். அதுதொடர்பாக கலந்துரையாடுவதற்கு மெய்நிகர் சந்திப்பு ஒன்றை ஒழுங்குபடுத்துவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

இந்த விவகாரத்தை நான் மே 18க்கு முன்னரே எழுத யோசித்தேன். ஆனால் இருக்கின்ற அமைப்பைக் குழப்பக்கூடாது என்பதோடு, துக்கத்தை அனுஷ்டிக்கப்போகும் மக்கள் மனதில் சலிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவும் அவ்வாறு எழுதுவதைத் தவிர்த்தேன். பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்க மதகுருவோடும் நான் உரையாடினேன். அவர் அதனை ஜனநாயக மயப்படுத்த வேண்டிய தேவையை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார். பரந்துபட்ட அளவில் அதை விஸ்தரிக்கும் பொழுது அதற்குள் யார் யார் வருவார்கள் என்ற பயம் உண்டு என்று சொன்னார். எனினும், இப்போதுள்ள பொதுக் கட்டமைப்பு வெளிப்படைத் தன்மையற்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

> **“ தமிழ் மக்களின் தேசத்திரட்சி சிதரிபோக ஒன்று, வெளியில் இருந்து தமிழ் அரசியலை ரிமோட் கொன்ட்ரோல் செய்ய முடியும் என்று நம்பும் புலம்பெயர்ந்த தரப்புகள். இரண்டாவது, தமிழ் மக்களின் தேசத் திரட்சியை சிதறடிப்பதன்மூலம் அரசியல் ரீதியாக தமிழ்மக்களை முழுமையாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள். மூன்றாவது தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன. ”**

முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பை மட்டுமல்ல நினைவு கூர்தலுக்காக ஏற்கனவே உள்ள பொதுக்கட்டமைப்புகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. அக் கட்டமைப்புகளின் பின்னணி குறித்தும், அதை யார் பின்னிருந்து இயக்குகிறார்கள் என்பதை குறித்தும் அக்கட்சிக்கு சந்தேகம் இருப்பதாக தெரிகிறது.

தமிழரசியலில் சூழ்ச்சிக் கோட்பாடுகளை அதிகம் புனையும் ஒரு கட்சி அது. ஆனாலும், தமிழ் அரசியலில் இப்பொழுது யார் யாரோடு நிற்கிறார்கள்? யாருக்கு யார் காசு கொடுக்கிறார்கள்? யாரை யார் ரிமோட் பண்ணுகிறார்கள்? என்று சந்தேகப்படும் அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை அதிகரித்து வருககிறது என்பது உண்மைதான்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி ரொட்ரிகோ மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை, மாவட்ட மக்கள் அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அந்நிகழ்வுக்கு ஆட்களைத் திரட்டியது படைப் புனாய்வுத் துறைக்கு நெருக்கமானவர்கள் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதுபோல வவுனியா நகரசபை மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவுநிகழ்வை வன்னித்தமிழர் ஒன்றியம் என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அதற்கு வவுனியா விகாராதிபதி நிதியுதவி செய்திருக்கிறார். அதாவது தமிழ் அரசியல் பரப்பில் ஒரு மையம் இல்லாத காரணத்தால் ஒரு பலமான திரட்சி இல்லாத காரணத்தால், யார் எதைச் செய்கிறார்கள்? யாரை யார் இயக்குகிறார்கள்? என்பவற்றைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை உருவாகி வருகிறதா?

தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உடைக்க வேண்டும் குழப்ப வேண்டும் என்று திட்டமிட்டு பல்வேறு வகைப்பட்ட தரப்புக்களும் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படுவதாகத் தெரிகிறது.

ஓர் ஆபிரிக்க பழமொழி உண்டு “ஆமை மதில் மேல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு யாரோ உதவியிருக்கிறார்கள் என்று பொருள்”. தமிழரசியலில் இப்பொழுது பல ஆமைகள் மதில் மேல் இருக்கின்றன. ஏன் கூரை மேலும் இருக்கின்றன. அந்த ஆமைகளை யார் அங்கே தூக்கி வைத்தது என்ற கேள்வி உண்டு. சில ஆமைகள் ஒரே சமயத்தில் இரு வேறு தரப்புக்களிடம் சம்பளம் வாங்கி வருவதாக பரவலாகச் சந்தேகங்கள் உண்டு.

இது சந்தேகம்தான்.இந்த இடத்தில் இதைப்பற்றிக் கதைக்க வேண்டும். ஏனென்றால், நவீன தமிழ் அரசியலில் ஏற்பட்ட ஒரு கூட்டுப் பேரழிவை நினைவு கூர்ந்து முடித்திருக்கும் இக்காலகட்டத்தில் பேசவில்லை என்றால் பிறகு எப்பொழுதும் அதைப்பற்றிப் பேச முடியாது.

தமிழ்மக்களின் தேசத்திரட்சி சிதறிப்போன தன் பின்னணியில்தான் இவ்வாறான சந்தேகங்கள் எழுகின்றன.இந்த சந்தேகங்களுக்கு இரண்டு தரப்புகள் பொறுப்பு. ஒன்று, வெளியில் இருந்து தமிழ் அரசியலை ரிமோட் கொன்ட்ரோல் செய்ய முடியும் என்று நம்பும் புலம்பெயர்ந்த தரப்புகள். இரண்டாவது, தமிழ் மக்களின் தேசத் திரட்சியை சிதறடிப்பதன்மூலம் அரசியல் ரீதியாக தமிழ்மக்களை முழுமையாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள். மூன்றாவது தமிழ்க் கட்சிகள்.

இதில் புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்புகள் நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் உதவிகளைச் செய்கின்றார்கள். ஆனால் அவர்களை அறியாமலேயே அந்த உதவிகள் தமிழரசியல் பரப்பில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. ஓர் இனப்படுகொலைக்குப் பின் தப்பியிருக்கும் மக்கள் என்ற அடிப்படையில் தாயகத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்களே உண்டு. அவர்களையும் ரிமோட் செய்ய முற்பட்டால், அது அவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வேட்டைப் பற்களுக்குள் சிக்கவைத்துவிடும் என்பது முதலாவது பயம். இரண்டாவது பயம், வெளியில் இருந்து கிடைக்கும் உதவிகளுக்காக செயற்படுகின்றவர்கள் ஒரு கட்டத்தில் தாமாகச் செயற்பட முடியாத பொம்மலாட்டப் பொம்மைகளாக மாறிவிடுவார்கள். பொம்மைகளால் தேசத்தைத் திரட்ட முடியாது. ஆமைகளாலும் தேசத்தைத் திரட்ட முடியாது.

பொம்மைகளும் ஆமைகளும் தமிழரசியல் பரப்பில் அதிகரித்துவரக் காரணம் அரங்கில் உள்ள தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந்தான். எல்லாருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு உண்டு. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் ஒரு தேசத்திரட்சியைக் கட்டியெழுப்பத் தவறிய அனைவருக்கும் இதில் பொறுப்பு உண்டு. தமிழ்மக்கள் மத்தியில் ஒரு தேசத்திரட்சியை கட்டியெழுப்பும் மக்கள் இயக்கமும் கிடையாது குடிமக்கள் சமூகமும் கிடையாது கட்சிக் கூட்டுக்களும் கிடையாது. அதனால் கடந்த 14ஆண்டுகளாக தமிழ் மக்கள் அவிழ்த்து விடப்பட்ட பாக்கு மூட்டை போல சிதறிக்கொண்டே போகிறார்கள்.

தமிழ் இளையோர் எப்படி நாட்டை விட்டு வெளியேறுவது என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது, முள்ளிவாய்க்காலில் கடைசிக்கட்டத்தில் எந்த வழியால் தப்பிச் செல்வது என்று சிந்தித்ததைப்போல இருக்கிறது என்று ஒரு செயற்பாட்டாளர் துக்கப்பட்டார்.

சிங்கள பௌத்த மயமாக்கல் நிலப்பறிப்பு பயங்கரவாத தடைச் சட்டத்தை புதுப்பிப்பது தமிழ் மக்கள் மத்தியில் குழந்தைப்பேறு குறைந்துவருவது இளையோர் நாட்டை விட்டு வெளியேறத் துடிப்பது போன்றவற்றின் பின்னணியில், தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட யாருமே இல்லை. ஆம், யாருமே இல்லை.

அந்த வெற்றிடத்தில்தான் கடந்த 14ஆண்டுகளாக, ஒரு பேரிழப்பை அனுஷ்டிப்பதற்காக பரந்துபட்ட அளவிலான, வெளிப்படைத் தன்மைமிக்க ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கமுடியாத மக்களாகத் தமிழ்மக்கள் காணப்படுகிறார்கள்.

மன்னாரில் இந்துக்கள் கட்டிய வளைவு உடைக்கப்பட்ட பின் அது தொடர்பில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான உரையாடலை தொடக்கி வைப்பதற்கு ஒரு சிவில் சமூகம்கூட தமிழ்மக்கள் மத்தியில் கிடையாது. வடக்கு கிழக்கு இணைப்பு அதிகம் சோதனைக்குள்ளாகி வரும் இக்காலகட்டத்தில் அதுதொடர்பில் வெளிப்படையான உரையாடலைத் தொடங்கி, கிழக்கில் இருக்கக்கூடிய சந்தேகங்களை நீக்குவதற்கு யார் முயற்சிக்கிறார்கள்? சாதி ரீதியாக பிற்படுத்தப்படும் மக்களின் அச்சங்களைப் போக்குவதற்குரிய தமிழ்த் தேசிய வேலைத் திட்டம் யாரிடம் உண்டு?

தமிழ்மக்களை வெளித்தரப்புகள் பிரிக்கப் பார்க்கின்றன, வெளித்தரப்புகள் ஆமைகளையும் பொம்மைகளையும் சம்பளம் கொடுத்து இயக்குகின்றன என்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பதிலாக தேசத்திரட்சியை உறுதிப்படுத்த வேண்டும் பலப்படுத்த வேண்டும். அதைச் செய்யத் தவறிய அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு விகிதஅளவுக்கு எதிரிக்கு சேவகம் செய்திருக்கின்றன.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்காய்க்கட்சியாய் பொதுக் கட்டமைப்பாய் சாதியாய் சமயமாய் சிதறிக்கொண்டே போகிறார்கள். இது தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகளுக்கே அதிகம் வாய்ப்பானது.தமிழ் மக்களைக் கூறு போடுவதற்கு ஆமைகளும் பொம்மைகளும் தேவையில்லை. தமிழ்க் கட்சிகளே போதும் என்பதுதான் கடந்த 14 ஆண்டுகால அனுபவம்.



# தமிழின அழிப்புக்கு நீதி கோரியும், தமிழீழ கோரிக்கையை ஆதரித்தும் பிரித்தானிய பிரதமருக்கு முஸ்லிம்கள் மனு!

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை யுத்தம் இடம்பெற்று 14 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் தாயகம் மற்றும் உலகமெங்கிலுமுள்ள தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்ற னர். அத்துடன் மே 18 ஆம் திகதியை இனப்படு கொலை தினமாக பிரகடனம் செய்து, நீதி தேடும் முயற்சியில் பலவழிகளில் போராடி வருகின்றர்.

இதே போல பிரித்தானியாவை தளமாக கொண்டு இயங்கும் இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையமும்(**ICPPG**)பன்முகப்பட்ட முயற்சிகளை எடுத்து வருகின்றது.

இவ்வாறான முயற்சிகளில் ஒன்றாக, தமிழரல்லாத வேற்று இன மக்களுக்கு, இலங்கையில் ஈழத்தமிழருக்கு எதிராக இடம்பெறுவது இனப்படுகொலையே என்பதையும், ஈழத் தமிழரின் விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாட்டையும் உணர்த்தி, அவர்களின் ஆதரவை திரட்டும் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அடிப்படையில், கடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நாளில், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான பிரித்தானியா வாழ் முஸ்லீம் மக்களை ஒன்றுதிரட்டி, "இலங்கையில் இனப்படுகொலைக்கு எதிரான முஸ்லீம்கள்" **[Muslims Against Genocide in Sri Lanka (MAG-SL)** என்ற அமைப்பை ஆரம்பித்துவைத்து, ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக களமிறக்கியுள்ளனர்.

18ம் திகதி தமிழர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதையடுத்து, 19ம் திகதி, இந்த அமைப்பை சேர்ந்த முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து, பிரித்தானியா மற்றும்

வெளிநாடுகளில் வாழும் பாதிக்கப்பட்ட தமிழ் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்களின் சார்பாக, பிரித்தானிய பிரதமருக்கு மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

## அந்த மனுவின் சாராம்சம் வருமாறு,

"இலங்கையில் இனப்படுகொலைக்கு எதிரான முஸ்லீம்கள் (ஆயுபு-ளுடு)" என்ற இந்த அமைப்பானது இலங்கையில் வாழும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக, சிங்கள-பௌத்த பேரினவாத இலங்கை அரசால் நடாத்தப்படும் திட்டமிட்ட மனித உரிமை மீறல்களை வெளிக்கொணரவும், தடுப்பதற்கும், அதற்கான நீதி தேடுவதற்குமாக, தமிழ் பேசும் முஸ்லிம்களால் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் அமைப்பு ஆகும்.

தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் சிங்கள-பௌத்த பேரினவாத அரசாங்கங்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களை இல்லாதொழித்து, இலங்கையை தனித்த பௌத்த-சிங்கள நாடாக உருவாக்கும் தமது தீவிரவாத நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்காக, தொடர்ந்து கேவலமான சதிகளையும் தந்திரங்களையும் மேற்கொண்டு, தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களிடையே முரண்பாடுகளை உருவாக்கி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் என்பன இதற்கு நல்ல உதாரணங்கள் ஆகும்.

காத்தான்குடி பள்ளிவாசல் மற்றும் பள்ளியத்திடல் போன்ற இடங்களில் சிங்கள காடையர்களை வைத்து இலங்கை அரசே அப்பாவி முஸ்லிம் மக்களை படுகொலை செய்ததுக்கு எங்களில் பலர் கண்கண்ட சாட்சியாவோம்.

ஆயினும் திட்டமிட்டே விடுதலைப்புலிகள் மீது இந்த வீண்பழி சுமத்தப்பட்டு, தமிழ் முஸ்லீம் மக்களிடையே ஆறாத வடு உருவாக்கப்பட்டது.

இது போலவே, யாழ்ப்பாணத்தில் இருந்த முஸ்லிம் மக்களிடையே தீவிரவாத குழு ஒன்றை ஊடுருவச்செய்து, ஆயுதங்கள் வெடிபொருட்களை வழங்கி, பெரும் மதக்கலவரத்தை திட்டமிட்டது இலங்கை அரசு.

தகவல் அறிந்த விடுதலைப்புலிகள் சில மசூதிகளில் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் வெடிபொருட்களை கையும் களவுமாக கைப்பற்றினர்.

எனினும் வெடிபொருட்களை முழுமையாக மீட்க முடியாமையாலும், யாழ் முஸ்லீம் மக்களிடையே குற்றவாளிகளை மட்டும் இனங்காண முடியாமல்போன காரணத்தாலும், நடக்கவிருந்த பெரும் இரத்தக்களரியை தவிர்ப்பதற்காக, வேறுவழியின்றி குறுகிய கால அவகாசத்தில் முஸ்லிம் மக்களை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

விடுதலைப்புலிகள் அந்த இக்கட்டான நிலையில் எடுத்த இந்த மிகவும் சாதுரியமான தந்திரோபாய முடிவு உண்மையில் பாராட்டப்பட வேண்டியதாகும். ஆனால் இதனை 'இனச்சுத்திகரிப்பு' என இலங்கை அரசு பொய்ப்பிரச்சாரம் செய்கிறது.

விடுதலைப்புலிகள் எடுத்த இந்த முடிவால் பெரும் மதக்கலவரம் தடுக்கப்பட்டு, பல ஆயிரம் உயிர்கள் காப்பாற்றப்பட்டன. முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்ட போதும், விடுதலைப்புலிகளால் யாரும் கொல்லப்படவில்லை, அவர்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்படவில்லை, அவர்கள் சொத்துக்கள் சூறையாடப்படவில்லை.

அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின் படி, சமாதான பேச்சு காலப்பகுதியில் அவர்கள் மீள அழைக்கப்பட்டு, அவர்கள் காணிகள் திரும்ப வழங்கப்பட்டு, மீள குடியேற அனுமதிக்கப்பட்டார்கள். அத்துடன், விடுதலைப்புலிகளின் தலைவர் முஸ்லீம் தலைமை உரிய மரியாதையுடன் அழைத்து, பேசியதுடன், இதற்கு பகிரங்க மன்னிப்பும் கேட்டது. இது அவர்களின் நேர்மைக்கும் பெருந்தன்மைக்கும் எடுத்துக்காட்டு. விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்லர்.

அவர்கள் போராட்டம் நியாயமானது. அவர்கள் ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும் போரிட்டார்கள். அவர்கள் என்றும் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டது இல்லை.

அமையவிருந்த தமிழீழத்தில் முஸ்லீம்களுக்கு சம உரிமை உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தது.

இந்த உண்மைகள் திட்டமிட்டு மறைக்கப்பட்டு, அப்பாவி முஸ்லீம் சிங்கள மக்கள் மற்றும் உலகநாடுகள் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என தவறாக நம்பவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த உண்மைகளை அப்பலப்படுத்தி, ஆதாரங்களுடன் நிரூபிக்கவும் **MAG-SL** அமைப்பு உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு உண்மைகளை வெளிக்கொண்டு வருவதன் மூலம், இலங்கையில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான முரண்பாடுகளை விலக்கி, புரிந்துணர்வை ஏற்படுத்தி, ஒற்றுமையை வலுப்படுத்த **MAG-SL** அமைப்பு கடுமையாக பாடுபடும். தமிழர்களும் முஸ்லீம்களும் சகோதர சகோதரிகளே.

இலங்கையில் முஸ்லீம் மக்கள் பேசுவது தமிழ் மொழியே. இதனால் எமது உறவு பிரிக்கமுடியாதது. கோவிட் காலத்தில் ஜனசா நல்லடக்கம் தடுக்கப்பட்டு எமது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டபோது தமிழ் மக்களே எமக்கு ஆதரவாக போராடினார்கள்.

அதுபோல, ஈஸ்டர் குண்டுவெடிப்பில் முஸ்லீம்கள் மீது வீண்பழி சுமந்தப்பட்ட போதும் தமிழர்களே எமக்காக குரல்கொடுத்தார்கள். இனிமேலும், சிங்கள-பௌத்த பேரினவாத அரசின் சதிக்கு பலிக்கடாவாக இடம்கொடுக்க மாட்டோம்.

அல்லாஹ்வின் வழியில் செல்லும் விசுவாசி பற்றி குர்ஆனில் அல்லாஹ் தெளிவாக கூறப்பட்டுள்ளது. உண்மையான முஃமின்கள் யார் (23ம் அத்தியாயம்) நன்மையைக் கொண்டே தீமையைத் தடுத்துக் கொள்வார்கள் (அல்குர்ஆன் 13:22). பொய் சாட்சி சொல்லமாட்டார்கள் (அல்குர்ஆன் 25:72).

எந்த உண்மையான முஸ்லீமும் இலங்கை அரசின் இரத்தவெறிக்கு உடந்தையாக மாட்டார்கள். அல்லாஹ் காட்டிய வழியில், பாதிக்கப்பட்ட ஈழத்தமிழருக்கு நன்மை செய்தன் மூலம் இலங்கை அரசின் தீமையை தடுப்போம். பொய்சாட்சி சொல்வதன் மூலம் காப்பாற்றமாட்டோம்.

அந்த வழியில், உண்மையாக தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தில் உறுதுணையாக இருப்போம். அவர்களின் சுதந்திர தமிழீழ நாடு என்ற இலட்சியத்தை முழுமையாக ஆதரிப்போம்" என்றும் இந்த மனுவின் அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அத்துடன் பின்வரும் 5 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன:**

(1) இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றது/ இடம்பெற்றுக்கொண்டிருப்பது "இனப்படுகொலை" **(Genocide)** என்பதை பிரித்தானிய அரசு உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான நீதி வழங்கும் பொறுப்பை பிரித்தானியாவே முன்னெடுக்க வேண்டும்.

(3) அதன் முதல்படியாக, யுத்த குற்றவாளிகளான ஜெனரல் சவேந்திர சில்வா உட்பட்ட இலங்கை அதிகாரிகள் மீது பிரித்தானியா தடைவிதிக்க வேண்டும்.

(4) இலங்கையில் வாழும் தமிழ்மக்களின் தாயகபகுதி "தமிழீழம்" என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(5) இலங்கையில் தமிழ் மக்கள் தமது சுய நிர்ணய உரிமையின் படி தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்க பொதுவாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்.

இந்த மனுவை, **ICPPG** மற்றும் **MAG-SL** அமைப்புக்களின் இணைப்பாளரான விதுரா விவேகானந்தன், **MAG-SL** அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களான முகமத் லாபிர் முகமத் ரோஷன், நிரபாஸ் முகமத் நாவ்பெர், ஷாவ்உள் ஹமீது ரோஷன் கான் , சம்சுதீபன் முகமத் சபைக்கு அபிரீன் முகமத், தூஉங் பாரூக் முகமத் ரிஸ்மி ஆகியோர் பிரதமர் அலுவலகத்தில் நேரில் சென்று சமர்ப்பித்தனர்

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில்
தவழும் மின்னிதழ் மற்றும்
அச்சு வடிவிலும் தினசரி மற்றும்
வார வெளியீடாக வெளிவரும்
தேசியம் பத்திரிகைக்கு
தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும்
ஆக்கபூர்வமான கட்டுரைகள்,
கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள்,
செய்திகள் போன்றவற்றை எமக்கு
அனுப்பி தேசியம் பத்திரிகையை
வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

# குளவிக் கூட்டிற்கு கல் எறிய ரணில் ஒன்றும் அரசியல் அரை டிக்கட் அல்ல!

என்ற அரசியல் கனவுடன் தொடர்ந்து உறவாடி வந்திருப்பவர் ரணில் விக்கிரமசிங்க என்பது தெரிந்த விடயமாகும்.

1994ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளராக போட்டியிட அப்போது பிரதமராக இருந்த ரணில் விரும்பினார்.

அப்போது ஜனாதிபதியாக இருந்தவர் டீ பி விஜயதுங்க. 1993 மேதினத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்ட தற்கொலை குண்டுத் தாக்குதலால் ஜனாதிபதி பிரேமதாச படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த பதவி மாற்றம் ஏற்பட்டிருந்தது.

1994 ஒக்டோபரில் ஜனாதிபதி தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டது. அதற்கு இரண்டு மாதங்கள் முன்னர் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் எதிரணியை சேர்ந்த சந்திரிக்கா வெற்றியீட்டி பிரதமர் பதவியை பிடித்திருந்தார்.

அப்போது எதிர்க் கட்சித் தலைவராக வந்தவர் காமினி திசநாயக்க. அவருடன் போட்டியிட்டு தோற்றவர் ரணில் விக்கிரமசிங்க. இந்த சூழ்நிலையில் 1994 ஜனாதிபதி தேர்தலில் காமினியே சந்திரிக்காவை எதிர்த்து போட்டியிட்டார். தேர்தல் பிரசாரத்தின் போது காமினி விடுதலைப்புலிகளின் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட, பதில் வேட்பாளராக நிறுத்தப்பட்டவர் அவரின் மனைவி சட்டத்தரணி சிறிமா திசநாயக்க. அந்தத் தேர்தலில் 62 வீத அமோக ஆதரவுடன் வெற்றியீட்டிய சந்திரிக்காவோடு, 1999 ஜனாதிபதி தேர்தலில் ரணில் மோதினார்.

கொழும்பில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் தற்கொலை குண்டுதாரியான இளம் யுவதி ஒருவர் தன்னைத் தானே அழித்துக் கொண்ட போது சந்திரிக்கா மயிரிழையில் உயர் தப்பினார். படுகாயம் அடைந்த அவரின் ஒரு கண் மோசமாக பாதிக்கப்பட்டது.

இந்த திடீர்த் திருப்பத்தால் ஏற்பட்ட அனுதாப அலையில், ரணிலுக்கு இருந்த, ஓரளவான வெற்றி வாய்ப்பு நழுவிப்போனது.

இம்முறை 54 வீதமான வாக்குகள் பெற்று சந்திரிக்கா வெற்றியீட்டினார். 2005 ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் எதிர ணியில் இருந்து ரணில் களமிறங்கிய போது, சந்திரிக்கா தலைமையிலான அன் றைய ஆளும் கட்சி சார்பில் களம் இறங் கியவர் மகிந்த ராஜபக்ச .

ரணில் வெற்றியீட்டியிருக்க வேண்டிய தேர்தல் அது. ஆனால் விடுதலைப் புலிகள் தரப்பில் ரணில் தொடர்பில் கசப்பும் இருந்தது! கணிப்பும் இருந்தது!!

கருணாவை பிரித்து எடுத்தவர் ரணில் என்பதில் கசப்பும், அவர் ஜனாதிபதியானால் தமக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் அரசியல் ராஜ தந்திர வலை ஒன்று பின்னப்படும். என்ற கணிப்பும் விடுதலை புலிகளுக்கு இருந்தது.

புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பு முடிவுக்கு இவையே பிரதான காரணங்களாக இருந்தன! அதன் விளைவாக வடகிழக்கில் 4 லட்சத்திற்கு குறையாமல், ரணிலுக்கு கிடைத்திருக்க வேண்டிய தமிழர் வாக்குகள் முடக்கப்பட்டன. ரணில் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

2010 ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிடவில்லை. புலிகளுக்கு எதிரான போரில் வெற்றிக் கதாநாயகனான மகிந்தவுக்கு எதிராக, போர் வெற்றியில் தானும் உரிமை கோரக்கூடிய நிலையில் இருந்த இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை ரணில் களத்தில் இறக்கினார். எதிர்பார்க்கப்பட்ட படி மகிந்த பெரும் வெற்றீயிட்டினார்.

2015 ஜனாதிபதி தேர்தலில் ரணிலின் திட்டம் அபாரமாக அமைந்தது.

இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் ஆசீர்வாதத்துடன், மகிந்தவின் அமைச்சர்களின் ஒருவரான மைத்திரிபால சிறிசேன எதிரணி வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு 2 நாட்கள் முன்னர் தான் இந்த வேட்பாளர் அதிரடியாக அறிவிக்கப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அணியின் ஆதரவோடும், பெரும்பாலான தமிழ் முஸ்லிம் கட்சிகளின் பக்க பலத்தோடும் மைத்திரி வெற்றியீட்டினார். இது ரணில் அமைத்த வியூகத்தால் வந்த வெற்றி. ஆனால் அதே ரணி லால் 2019 இல் கோத்தபாயவுக்கு எதிராக களமிறங்க முடியவில்லை. வேண்டா வெறுப்பட்டன அவர் சஜித்தை வேட்பாளராக அறிவிக்க வேண்டி இருந்தது.

சஜீத்தின் படு தோல்வியை தொடர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணில் தலைமையிலான அணி தமது காலை வாரிவிட்டதாக சஜீத் அணி பகிரங்கமாக குற்றம் சாட்டியது. அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக உடைந்தது.

சஜீத் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது. அடுத்து வந்த பாராளுமன்றத் தேர்தலில் சஜீத்தின் ஐக்கிய மக்கள் சக்திக்கு கௌரவமான தோல்வி கிடைத்தது. ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி துடைத்தெறியப்பட்டது. அவரும் முதல் தடவையாக தோற்கடிக்கப்பட்டார்.

ஆனாலும், தேசிய பட்டியலின் புண்ணியத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரே ஒரு ஆசனத்தை உடனடியாக நிரப்பாமல் ரணில் காலம் தாழ்த்தினார். அந்த ஆசனத்தைக் கோருவதற்கு கட்சியின் பெரும்புள்ளிகள் சிலர் தூண்டப்பட்டனர்.

சுமார் ஒரு வருட காலம் நீடித்த இந்த இழுபறிகளை ஓரக்கண்ணால் பார்த்தபடி ரணில் மௌனம் சாதித்துக் கொண்டிருந்தார். அந்த மௌனத்தின் அர்த்தம் கடைசியில் துலங்கியது.

கட்சியின் ஒப்புதலோடு ரணில் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குள் மீண்டும் பிரவேசித்த போது, தலைமறைவாகப் போயிருந்த ஐக்கிய மக்கள் சக்தியைத் தவிர, ஏனைய ஆளும் கட்சி எதிர்க்கட்சி எம் பிக்கள் அவைரும் எழுந்து நின்று வரவேற்றனர்.

அந்த ரணில் தான், கடந்த வருடம் நாடு சந்தித்த அரசியல் கொந்தளிப்பின் போது தனக்கு ஜனாதிபதி கோட்டபாயவினால் வழங்கப்பட்ட வாய்ப்பினை துணிச்சலுடன் ஏற்று பிரதமராகி, தொடர்ந்து கோட்டபாய விரட்டப்பட்ட வேளையில் அரசியல் சட்டப்படி ஜனாதிபதியானார்.

தொடர்ந்து பாராளுமன்ற வாக்கெடுப்பிலும் ஆளும் பெரமுன கட்சியின் ஆதரவுடன் அவர் வெற்றியிட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில எம் பிக்கள் தனக்கு வாக்களித்தார்கள் என்பதனையும் பகிரங்கமாக கூற அவர் தவறவில்லை.

இப்பொழுது ரணிலின் நோக்க மெல்லாம் தன்னை ஆதரிக்கின்ற மற்றும் ஆதரிக்க கூடிய "எல்லோருக்கும் எல்லாமாக" தனனை மாற்றிக் கொள்வது தான்.

சிங்கள இனவாதிகளை அநாவசியமாக பகைக்காமல், பௌத்தமத பீடங்களை உரிய முறையில் மரியாதையுடன் கையாண்டு, முப்படைகளினதும் அபிமானத்தை யும் மேலும் அதிகரித் துக் கொண்டு, தமிழ் கட்சிகளோடு பேச்சு வார்த்தை நாடகத்தையும் அரங்கேற்றி, அதே பாணியில் மலையக தமிழ் கட்சிகளையும் முஸ்லிம் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஓர் வானவில் கூட்டணியை அமைக்கும் நிகழ்ச்சி நிரலே இப்பொழுது அவரின் தெரிவாகவும் தேவையாகவும் இருக்கின்றது.

அதே வேளையில், தொடர்ந்து இன்னொரு புறத்தில், சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியை துண்டு துண்டாக உடைத்து எடுப்பதற்கு ரணிலின் ஆலோசகர்கள் ஆர்பபாட்டம் ஏது மின்றி செயற்படுகின்றார்கள்.

அடுத்து வரும் சில வாரங்களில் பல எம். பிக்கள் கட்சி மாறு வதை நாடாளுமன்றம் மட்டுமன்றி, நாடும் சந்திக்கும். காட்டிக் கொள்ளாமல் காரியம் ஆற்றுவதில் ரணிலின் சாமர்த்தியம் அபாரமானது. அவருக்கு இப்பொழுது தேவைப்படுவதெல்லாம் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் ரணிலின் ஆதரவாளர்கள் இந்த குறிக்கோளுக்காக ஏற்கனவே செயற்படத் தொடங்கி விட்டார்கள்.

புலம்பெயர் தமிழர் அமைப்புகளைச் சேர்ந்த பல புள்ளிகளும் இந்த தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியம் பேசி வந்திருக்கும் பலரும் தமிழ் தேசியத்திற்கு எதிராக நிற்கும் பலரும் இந்த விவகாரத்தில் தத்தமது சொந்த நலன்கள் சங்கமித்து இருப்பதை உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தமட்டில், அவற்றுக்கிடையில் உள்ள பிளவுகளும் பிரிவுகளும், உரசல்களும் விரிசல்களும், ரணிலின் குறிக்கோளுக்கு பயன்படும் என்றே எதிர்பார்க்க முடியும்.

தமிழரசு கட்சி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவெடுத்ததும், அத னைத் தொடர்ந்து, இத்தனை காலமும் பதிவு ஒன்று இல்லாமலே, அதனுடன் கூடி வாழ்ந்த ரெலோவும் புளொட்டும் போர்க்கொடி தூக்கியதும், அடுத்து ஐந்து கட்சிகள் கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவானதும், ஏதோ ஒன்றும் தானாக நிகழ்ந்த திடீர் திருப்பங்கள் அல்ல.

இவற்றின் பின்னணியில், பாரிய வர்த்தக நலன்களும் சொந்த அரசியல் அபிலாசைகளும் கொண்ட பண மூட்டைகள் சில சம்பந்தப் படுத்தப்பட்டிருப்பது தமிழ் மக்கள் இன்னமும் தெரிந்து கொண்டிருக்காத விடயம் தான்.

தமிழ் தேசியம் பேசும் வட்டங்களில் அரசல் புரசல்களாக இத்தகைய கதைகள் காதோடு காதாக பேசப்பட்டு வந்திருக்கின்றன.

விக்னேஸ்வரன் அடி எடுத்து வைத்திருக்கும், புதிய அரசியல் பாதை, கஜேந்திரகுமார் காட்டும் தீவிரவாத போர்க்கோலம் எல்லாவற்றிற்கும் பின்னாலே தம்மை அடையாளம் காட்ட விரும்பாத பல பிரமுகர்கள் இருக்கத்தான் செய்கின்றனர்.

கொழும்பிலும் வெளிநாடுகளிலும் நீண்ட காலமாக வசதியாக வாழும் தமிழ்க் கனவான்கள் பலருக்கு ரணில் மீது இப்பொழுது ஈர்ப்பு ஏற்பட்டுள்ளது.

வர்க்கச் சிந்தனை கொண்ட இந்த மனிதர்கள் எல்லாம் புலிகள் அரசாண்ட காலத்தில் அவர்களின் அபிமானிகளாக தம்மை மாற்றிக்கொண்டு விலாசம் காட்டியவர்கள் என்பது தான் இதிலுள்ள மிகப் பெரிய சோகம்.

தமிழரசு கட்சிக்குள் நிலவும் தலைமை போட்டியில் இருந்து, தமிழ் தேசிய கூட்டமைப்பின் சில புள்ளிகளை சம்பந்தப்படுத்தி மேற்கொள்ளப்படும் திரை மறைவு நடவடிக்கைகள் வரையில், ரணிலுக்கான காய்நகர்த்தல்கள் தொடர்கின்றன என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

மலையகத்தை பொறுத்தமட்டில் வலை கச்சிதமாக பின்னப்படுகின்றது. வடிவேல் சுரேசின் அரசியல் குத்துக்கரணம், கிழக்கின் ஆளுனராக செந்தில் தொண்டமான் என்ற ரீதியில் ரணிலின் ஆதரவுத் தளம் மேலும் பலப்படுத்தப்படுகின்றது.

மனோகணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியும் குறி வைக்கப்படுகின்றது. சிக்கப் போவது யார்? யார்? என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் உட்பட முஸ்லிம் கட்சிகளை எப்படி கையாளுவது என்பது பற்றி ரணிலுக்கு யாரும் வகுப்பு எடுக்கத் தேவையில்லை. பேச்சுவார்த்தை ஒன்றைத்தவிர வேறு வழி தெரியாத தமிழரசுக்கட்சி, மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை குஷிப்படுத்த, அவர்களோடு 13வது திருத்தம் பற்றி 13 தடவைகள் என்ன, அதற்கு அதிகமாகவும் பேச ரணில் தயார்.

ஆனால், 13 ஐ தேர்தல் முடியும் வரை நடைமுறைப்படுத்த அவர் தயாரில்லை. இந்த விடயத்தில் இந்தியாவை அவர் எப்படியாவது சமாளிப்பார். தேர்தல் நெருங்கி வரும் வேளையில் குளவிக் கூட்டுக்கு கல்லெறியும் வேலையை செய்ய, ரணில் ஒன்றும் அரசியல் அரை டிக்கட் அல்ல.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலை அவருக்கு மிகவும் சாதகமானது. சிங்கள எதிர்க்கட்சிகளிடமும் ஒற்றுமையில்லை. ஓர் பொது வேட்பாளருக்கான வாய்ப்பு அறவே இல்லை. அதற்கு பொருத்தமான ஆளும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை.

இந்த நிலையில், எதிர்பாராத அரசியல் நெருக்கடி ஏதாவது ஏற்பட்டால் ஒழிய, வெற்றி இலக்கை நோக்கிய அவரின் நிதானமும், தந்திரமும் நிறைந்த பயணத்தை தடுத்து நிறுத்துவது ஒருபோதும் சாத்தியமாகப் போவதில்லை.

இந்த நிலைமையில், தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்துவதற்கான வாய்ப்பும் இருக்கத்தான் செய்கின்றது.

தமிழரின் தேசிய அபிலாசைகளை முன் நிறுத்தி, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணி திரண்டு, யதார்த்த பூர்வமான அரசியல் அணுகுமுறை ஒன்றை வகுத்து செயற்படுவதற்கான முதல் அடியை எடுத்து வைக்க எந்த கட்சியாவது முன்வருமா?

## கனடா - இலங்கை ராஜீய...

கனடா பிரதமர் தமிழர் இனப்படுகொலை தினமாக மே 18ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்பை மே 23ஆம் திகதி வெளியிட்ட பிறகு, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கைக்கான கனடா தூதுவரை நேரில் அழைத்து, கனடா அரசின் அறிவிப்பை முழுமையாக நிராகரிப்பதாக கூறினார்.

இலங்கை எம்.பி உதய கம்மன்பில இந்த விஷயத்தில் கனடாவுக்கு எதிர்வினையாற்றும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார். இலங்கையில் நடக்காத தமிழ் இனப்படுகொலைக்காக ஒரு திகதியை ஒதுக்குவதற்கு பதிலாக, கனடாவில் ஆதிவாசி தினம் கடைப்பிடிக்கப்படும் ஜூன் 21ஆம் திகதியை, கனடா ஆதிவாசி இனப்படுகொலை தினமாக பெயரிட வேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

## யாழ் தையிட்டி திஸ்ஸ விகா...

யாழ் தையிட்டி திஸ்ஸ விகாரை நேற்று காலை 5.30 மணியளவில் தென்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட மக்களுடன் இரகசியமாக திறந்து வைக்கப்பட்டது.

இதையடுத்து குறித்த பகுதிக்கு பிரவேசிக்க ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதேவேளை தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரியும், தனியார் காணிகளை மீள விடுவிக்கக் கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு இரகசியமாக விகாரை திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனப்படுகொலை குறித்த ...

கையளிக்கவேண்டிய பொறுப்பு தமிழ்மக்களுக்கு இருக்கின்றது என்று வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து பிரித்தானியத் தமிழர் பேரவை மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இனவழிப்பானது தற்போது வரை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த இனப்படுகொலைகளின் உச்சகட்டமாகக் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோது உலகநாடுகளும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச கட்டமைப்புக்களும் மௌனமாக வேடிக்கை பார்த்ததை தமிழ் மக்கள் எப்போதும் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ் மக்களுக்கு தாயகம், தேசியம் மற்றும் தன்னாட்சி என்ற அடிப்படையில் நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதையும் இனப்படுகொலை உள்ளிட்ட கடந்தகால மீறல்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் விசாரணைப் பொறிமுறையின் ஊடாக நீதியை நிலைநாட்டுவதையும் முன்னிறுத்திய பல்வேறு நடவடிக்கைகளை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

அதன்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இறுதியாக நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தின் பிரகாரம் கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டி அவற்றை வழக்குத் தொடர்வதற்கு ஏதுவான கோப்புகளாகத் தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனவே இவ்வாறு கிடைத்த வாய்ப்பைக் கைவிடாமல் தேவையான அனைத்து சாட்சியங்களையும் சேகரித்து இப்பணிக்குழுவிடம் வழங்குவதை மிகமுக்கிய கடமையாகக் கருதுகின்றோம். அதற்குரிய நடவடிக்கைகளை நாமனைவரும் இணைந்து முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்று பிரித்தானியத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

## ஈழத்தமிழ் மாணவன் அமெரி...

விண்வெளி குறித்த நிறுவனமான **National Space Society (NSS)** சர்வதேச ரீதியாக மாணவர்களிடையே நடாத்திய போட்டியில் வெற்றி பெற்று ஈழத்தமிழர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

விண்வெளியில் மனிதர்களைக் குடியமர்த்தும் போது பின்பற்ற வேண்டிய அறிவுசார் நுட்பங்களை உள்ளடக்கி, அவரது சிந்தனையில் உருவான செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக **NATIONAL SPACE SOCIETY (NSS)** அறிவித்துள்ளது. உலகம் முழுவதும் 19 நாடுகளில் இருந்து 26725 பங்கேற்ற நிலையில், ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் அர்ச்சிகன் அனுப்பிய செயற்றிட்டத்தை **NSS** அங்கீகரித்து, அவரை வெற்றியாளராக அறிவித்துள்ளதோடு, அமெரிக்காவில் உள்ள **Texas** மாநிலத்தில் ளேளு அமைப்பின் தலைமையில் இந்த மாதம் இடம்பெறும் அறிவியல் மாநாட்டிற்கும் அவர் அழைக்கப் பட்டிருப்பதுடன், அங்கு உரையாற்றும் வாய்ப்பினையும் பெற்றுள்ளார்.

இன்று சாதனை மாணவனாக பாராட்டுப் பெறும் அர்ச்சிகன் தாயகத்திலிருந்து தனது பெற்றோரோடு அனைத்தையும் இழந்து, வலிகளை மட்டுமே சுமந்து கொண்டு அகதியாக இந்தியாவிலே தஞ்சமடைந்திருந்தார். இம் மாணவனின் சாதனை எந்தச் சூழலிலும் சாதிக்க முடியும் என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது.




முன்பெல்லாம் மலையக மாணவர்கள் என்று சொன்னதும் "கற்றலில் பின் தங்கிய சமூகம்" என்று பெரும்பான்மையாக சொல்வது வழக்கம். காரணம் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார காரணங்களால் கல்வியை இடைநிறுத்தி சிறு வயதிலேயே வேலைக்கு செல்லும் தன்மை காணப்படுவதாகும். இந்நிலை இன்று முற்றிலும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. எனினும், பெரும்பாலும் சாதாரண தர கல்வியை பூர்த்தி செய்து, உயர்தர கல்வியிலும் சிறந்த பெறுபேற்றை பெற்று, இலங்கையில் பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்களில் இன்று மலையக மாணவர்களின் கல்வித் தகைமை அதிகரிப்பதுடன், பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் மாணவர்களும் அதிகரித்துள்ளனர்.

பல மாணவர்கள் உயர்தரத்தில் கலை பிரிவை தெரிவு செய்வது பாராட்டத்தக்கது. என்றாலும், ஏனைய துறைகளில் அவர்களுக்கு ஆர்வம் இல்லையா? என்ற கேள்வி பலருக்கு எழுந்திருக்கும். வணிகத்துறையை சிறிதளவு தெரிவு செய்து கற்ற போதிலும், விஞ்ஞான, கணித துறைகளை தெரிவு செய்து பல்கலைக்கழகத்திற்குள் பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகும். இதற்கு காரணம், கலை பிரிவை தவிர ஏனைய பிரிவில் ஆர்வம் இல்லை என்பதல்ல. குறைந்த கட்டணத்தை செலுத்தி, கலை பிரிவு வகுப்புகளுக்கு மட்டுமே செல்ல முடியும் என்பது தான்.

இன்றும், பொறியியலாளராக வைத்தியனாக உருவாக வேண்டும். என்பது பலரது கனவாக இருந்தாலும், மலையகத்தில் நாள் ஒன்றுக்கு கிடைக்கும் ஊதியம், மாதம் முழுவதுமான உணவு தேவையை பூர்த்தி செய்வதே பெரும் பிரச்சினையாக உள்ள நிலையில், கல்வி இரண்டாம் பட்சம் என்ற எண்ணத்தில் பலர் உள்ளனர்.

ஆனால், சில பெற்றோர்கள் உணவையும் மறந்து, வீட்டில் உள்ள பொருட்களையும் விற்று, தேயிலைத் தோட்ட வேலையுடன் சேர்த்து, இரவு நேரங்களில் தேயிலை தொழிற்சாலைகளுக்கும் கூலி வேலைக்கு சென்று, பிள்ளைகளை படிக்க வைக்கிறார்கள்.

பெற்றோரின் உழைப்பிற்காக, உயர்தரம் கற்று, பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்த மாணவர்களின் கல்வி ஒருவிதத்தில் மாபெரும் வெற்றி! என்றாலும், இன்னொரு விதத்தில் பல்கலைக்கழக வாழ்க்கை என்பது, மலையக மாணவர்களுக்கு பெரும் சவாலான விடயமாகவே உள்ளது.

மலையக மாணவர்களின் பெரும் பிரச்சனையே பொருளாதாரம் தான். பல்கலைக்கழகத்திலும் இந்த பிரச்சனைக்கு பல மாணவர்கள் முகம் கொடுக்கிறார்கள். பெரும்பாலும், தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் பெற்றோரின் பிள்ளைகள் தான் மலையகத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகின்றார்கள். உயர்தரத்திற்கான செலவினை விட, பல்கலைக்கழகத்திற்கான செலவுகள் அதிகம். உணவு, விடுதி, கற்றல் செயல்பாடுகள், இதர செலவுகள் என பல்வேறுபட்ட விடயங்களுக்கு பணம் தேவைப்படுகிறது.

பல்கலைக்கழகங்களில் உதவி தொகை வழங்கப்பட்டாலும் கூட, அந்த தொகை போதாமையும், அதே சமயத்தில் குறித்த நேரத்திற்கு அவை வழங்கப்படாத காரணத்தினால், பெரும்பாலும் வீட்டு வருமானத்தை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய நிலையும் காணப்படுவதுடன், ஒவ்வொரு மாதமும், ஏற்படும் மேலதிக செலவுக்கான தொகையை, பெற்றுக்கொள்ள சிரமப்பட வேண்டியதாகவும் உள்ளது.

இந்நிலையில், பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்ய பல மாணவர்கள் வேலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஒரு விதத்தில் பட்டப்படிப்பை மாணவர்களே தங்களின் உழைப்பில் பூர்த்தி செய்து கொண்டாலும், இரவு நேர வேலைக்கு செல்லும் மாணவர்களின் தொகை அதிகமாக காணப்படுவதால், கற்றலில் கவனம் குறைவடைந்து, பெருபேற்றை பாதிக்கும் நிலையும், உருவாகி விடுகிறது. சில மாணவர்கள் இத்தகைய சூழ்நிலைகளுக்குள் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள, பல்கலைக்கழக கல்வியையே இடைநிறுத்திக் கொள்கிறார்கள்.

அடிப்படையில் பொருளாதாரம் அதிக பிரச்சனையை ஏற்படுத்துவதால் அருகில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு செல்லலாமே? என்ற கேள்வி எழலாம் ஆனால், அருகிலுள்ள பல்கலைக்கழகங்களில் காணப்படும் மொழி பிரச்சனை காரணமாக, அங்கு செல்ல அச்சப்படுவதால், தூர பிரதேச பல்கலைக்கழகங்களுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது.

இதனால், போக்குவரத்து பிரச்சனையை எதிர்நோக்குகிறார்கள்.

நீண்ட தூரம் பேருந்து பயணம் என்பதால், பேருந்தில் பலவிதமான அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன், பல்கலைக்கழகத்திலிருந்து வீட்டிற்கு செல்லும்போது, மலையகப் பாதைகளின் சீரற்ற தன்மையும், மக்களுக்கான வரையறுக்கப்பட்ட பேருந்து சேவையும், போக்குவரத்தின் பெரும் சவாலாகும்.

வீட்டிற்கு செல்வதை விட, பல்கலைக்கழக சமூகத்தில் தங்கிவிட நினைத்தாலும், சமூக ரீதியாக பழக்கத்தில் இருந்து மாறுபட்ட சமூகமாக இருப்பதால், மொழிநடை கலாச்சாரம், உணவு முறைகள் போன்றவற்றாலும், புதிய சமூகத்தை விரைவாக பழகிக் கொள்ள முடியாத தன்மையும், இலகுவில் ஏற்றுக் கொள்வதிலும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.

சமூகம் மட்டுமல்ல, சூழலியல் சார்ந்த விடயங்களும், கல்வியில் முக்கியம் பெறுகிறது. இலங்கையை பொறுத்தவரையில், மலையகத்தின் காலநிலையும், ஏனைய மாவட்டங்களின் காலநிலையும், வித்தியாசமானது. குளிரான பிரதேசத்திலிருந்து திடீரென வெப்பமான சூழலுக்குள் வாழ முற்படும் போது, உடலில் ரீதியான தோல் பிரச்சனை, கண்வலி, தலைவலி, உடல் ஓவாமை போன்ற பிரச்சனைகள் மருத்துவ செலவையும் தருவதுடன், இது உளவியல் பாதிப்புக்கும் காரணமாக அமைந்து விடுகிறது.

இவை மட்டுமல்ல, மலையக பாடசாலைகளில் ஆங்கிலம், மற்றும் கணினி பாடங்களினை கற்பிக்கும் பாடசாலைகள் மிகக் குறைவு. கிராமிய பாடசாலைகளில் இத்தகைய பாடங்கள் கற்பிக்கப்படுவது இல்லை என்றும் சொல்ல முடியும். அப்படி இருக்க பல்கலைக்கழகங்களில் கணினி மற்றும் ஆங்கில அறிவு மிக அவசியமான ஒன்றாக இருக்கும் போது, புதிதாக அவற்றை ஆரம்பத்திலிருந்து கற்று பட்டப்படிப்பை தொடர மாணவர்கள் பெரிதும் சிரமப்படுவதோடு, இப்பாடங்களையோ, அல்லது குறித்த ஒரு பாடத்துடன் தொடர்புடைய இதர பாடங்களையோ, வெளியில் சென்று கற்பதற்கான சூழ்நிலைகள் இல்லாத காரணத்தினால், வெறுமனையே பட்ட சான்றிதழ் உடன் மட்டும் வெளியேறும் சந்தர்ப்பங்கள் அதிகமாகவே காணப்படுகிறது.

இவ்வாறு, பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு மலையக மாணவர்கள் முகம் கொடுப்பதால் பல்கலைக்கழகம் வரை கல்வியை தொடர்ந்தும், அதனை மிகச் சிறப்பான பெறுபேற்றுடன் நிறைவு செய்ய முடியாத நிலையில், பலரின் கல்வி செயல்பாடு மந்தகதியில் நகர்கிறது.

பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியில் மலையக மாணவர்களின் பல்கலைக்கழக சவால்கள் பற்றிய அறிவுறுத்தல்களும், அவற்றை கையாள்வதற்குரிய சிறந்த வழிமுறைகளையும், வழங்கும் பட்சத்தில் பல்கலைக்கழக கல்வியை தொடரும் துணிவும், அதே சமயத்தில், சவால்களை சந்திக்க கூடிய தெளிவும் உருவாகும். இதனால், மிகச்சிறந்த கல்வியலாளர்களை மலையகத்தில் உருவாக்க முடியும்.






இப்பத்திரிகை 26.05.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு,
இல.10, முருகேசர் லேன், நல்லூரில் அமைந்திருக்கும் மதி கலர்ஸ் அச்சகத்தால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.